


32ஆவது ஆண்டில்

# விளம்பரம்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நதி: 32 பாலம்: 03 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 01, 2022

# குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் - 2022

2022ஆம் ஆண்டிற்கான 24ஆவது குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் சீனாவின் பெய்ஜிங் (Beijing) நகரில் 2022 பெப்பிரவரி 4ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன. இவை பெப்பிரவரி 20ஆம் திகதிவரை நடைபெறும். பின்னர் மார்ச் 4ஆம் திகதியில் இருந்து 13ஆம் திகதிவரை 2022ஆம் ஆண்டிற்கான குளிர்கால பராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

பெய்ஜிங் நகரம்தான் கோடைகால மற்றும் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் இரண்டும் நடக்கும் முதலாவது நகரம் ஆகும். 2022ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக்தான் ஒலிம்பிக் வரலாற்றில் சீனாவில் நடைபெறும் முதலாவது குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியாகும். 2008ஆம் ஆண்டில் கோடைகால ஒலிம்பிக்குக்காக முதலில் கட்டிய நான்கு உள்ளக அரங்குகளை பெய்ஜிங் நகரம் 2022ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகளுக்குப் பயன்படுத்த உள்ளது. அதேபோல் கோடைகால ஒலிம்பிக்கின் போது ஆரம்ப மற்றும் நிறைவு விழாக்கள் நடைபெற்ற பெய்ஜிங் தேசிய மைதானத்தில் (Beijing National Stadium) இம்முறை குளிர்கால ஒலிம்பிக்கின் ஆரம்ப மற்றும் நிறைவு விழாக்கள் நடைபெற உள்ளன.

பெய்ஜிங் நகரில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள், அவற்றிற்கான செலவீனம், அவற்றால் சுற்றுப்புறச்சூழலில் ஏற்படும் பாதிப்பு மற்றும் மனித உரிமைப் பிரச்சினைகள் போன்றவற்றால் பல்வேறு சர்ச்சைகளுக்கு உட்பட்டுள்ளன. அத்துடன் ஜப்பானின் ரோக்கியோ நகரில் நடைபெற்ற 2020 கோடைகால ஒலிம்பிக் விளையாட்டின் போது ஏற்பட்ட கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவல் காரணமான கவலைகள் மற்றும் கரிசனைகளும் பெய்ஜிங் இல் நடைபெற உள்ள 2022 குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டிலும் தோன்றியுள்ளன.

கோவிட்-19 தொற்று நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தும்முகமாகப் பல சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகள் 2022 குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின்போது கடைப்பிடிக்கப்பட உள்ளன. இவ்விளையாட்டுக்களை நேரடியாகப் பார்க்க அனுமதிக்கப்பட உள்ள பொதுமக்களின் எண்ணிக்கை மிகவும் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து வரும் பார்வையாளர் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் அரங்கில் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மட்டுப்படுத்தப்பட்ட உள்ளூர் பொதுமக்களுக்கு மட்டுமே விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் அரங்கிற்குள்


Beijing National Stadium

செல்வதற்குரிய அனுமதிச் சீட்டுகள் விற்பனை செய்யப்படுகிறது.

பெய்ஜிங் ஒலிம்பிக் நிர்வாகக் குழுவும், சீன அரச அதிகாரிகளும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கு வருவோர் எல்லோருக்கும் கோவிட்-19 பரிசோதனைக் கான பிசிஆர் சோதனை செய்யப்பட்டு அதில் நோய் இல்லை என உறுதிப்படுத் தப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுவர் எனத் தெரியப்படுத்தியுள்ளனர்.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் விளையாட்டு வீரர் கோவிட்-19இற்கான தடுப்பூசிகள் இரண்டும் போட்டிருக்க வேண்டும் என்ற தேவையில்லை. தடுப்பூசிகள் இரண்டைப் போடாத விளையாட்டு வீரர் அவர்களுடன் போட்டியிடும் ஏனைய விளையாட்டு வீரர்களைச் சந்திக்க முன்னர் 21 நாட்கள் அங்கே தனிமையில் இருக்க வேண்டும்.

விளையாட்டு நிகழ்வுகளின்போது விளையாட்டு வீரர், அவர்களது பயிற்றுநர், அவர்களுடைய பணியாட்கள், தொண்டர் மற்றும் ஊடகவியலாளர் ஒரு குழுவாகவே இயங்குவர். அவரவர்களுக்கெனக் குறிப்பிடப்பிட்ட பகுதிக்குள்ளேயே இருக்க வேண்டும். அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட போக்குவரத்து வாகனங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

பெய்ஜிங் ஒலிம்பிக் நிர்வாகக்குழு பிசிஆர் சோதனையில் சுழற்சி வரம்பு இலக்கம் (Cycle threshold value) 35இற்கு மேல் பெறுபேறு பெற்றவர்களே நோய்த்தொற்று இல்லாதவர் என உறுதிப்படுத்தப்படுவர் என ஜனவரி 23இல் அறிவித்தது. ஒன்ராறியோ மாகாணம் மற்றும் கனடாவின் ஏனைய பகுதிகளிலும் பிசிஆர் சோதனையில் சுழற்சி வரம்பு இலக்கம் 35இற்கு மேல் பெறுபேறு பெற்றவர்களே நோய்த்தொற்று இல்லாதவர் என உறுதிப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஜனவரி 23இற்கு முன்னர் பெய்ஜிங் ஒலிம்பிக் நிர்வாகக் குழு மிகவும்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)




























# குளிர்கால...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

கடுமையான விதிமுறையை அமல்படுத்தி இருந்தது. பிசிஆர் சோதனை மூலம் கோவிட்-19 நோய் உள்ளவர் என ஒருவர் அறியப்பட்டால் (சுழற்சி வரம்பு இலக்கம் 35இற்குள் பெறுபேறு பெற்றவர்) அவர் 10 நாட்களுக்குத் தனிமைப்படுத்தப்படுவார். பின்னர் அவர் தொடர்ந்து 3 நாட்களுக்கு நோய்த் தொற்று அற்றவரென பிசிஆர் சோதனை மூலமும் (சுழற்சி வரம்பு இலக்கம் 35இற்கு மேல் பெறுபேறு பெற்றவர்) அவரில் எந்தவிதமான நோய் அறிகுறிகள் இல்லை எனவும் உறுதி செய்த பின்னரே அவர் ஏனைய விளையாட்டு வீரர்களைச் சந்திக்க அனுமதிக்கப்படுவார். அத்துடன் நோய்த் தொற்று உள்ளவருடன் தொடுகையில் இருந்தவரும் பிசிஆர் சோதனை மூலம் கோவிட்-19 நோய் இல்லை என உறுதி செய்யப்பட்டாலும், 7 நாட்கள் தனிமைப் படுத்தப்படுவார். இவ்வாறு தனிமைப் படுத்தப்படுவோருக்கு ஒரு நாளைக்கு இரண்டு தரம் பிசிஆர் சோதனை செய்யப்படும்.

பெய்ஜிங் ஒலிம்பிக் நிர்வாகக் குழுவின் அறிவித்தலின்படி ஜனவரி 22ஆம் திகதி வரை பெய்ஜிங் ஒலிம்பிக் விளையாட்டிற்கு வந்த 2,586 பேரில் 72 பேரே கோவிட்-19 நோய் உள்ளவர் என அறியப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர். அத்துடன் இதே காலப்பகுதியில் பெய்ஜிங் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்ற வந்த விளையாட்டு வீரர்களும் அவர்களின் பயிற்சியாளர்களுமான 171 பேரில் ஒருவரும் கோவிட்-19 நோய்த் தொற்றுக்கு ஆளானவர்கள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை பெய்ஜிங்கில் நடைபெற உள்ள குளிர்கால




ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் 91 நாடுகளைச் சேர்ந்த 2,864 விளையாட்டு வீரர் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப் படுகிறது. பெய்ஜிங் ஒலிம்பிக் நிர்வாகக் குழு விளையாட்டுகளில் பங்குபற்ற வீரர்கள் கட்டாயம் கோவிட்-19இற்கான தடுப்பூசிகள் இரண்டு போட்டிருக்க வேண்டிய தேவையில்லை என அறிவித்திருந்தாலும், கனடா உட்படப் பல நாடுகள் தங்களது நாட்டின் சார்பில் இந்த ஒலிம்பிக் விளையாட்டுகளில் பங்குபற்றும் விளையாட்டு வீரர் எல்லோரும் கட்டாயமாக (Mandatory) கோவிட்-19இற்கான தடுப்பூசிகள் இரண்டு போட்டிருக்க வேண்டுமென அறிவித்துள்ளன.

சில சுற்றுப்புறச் சூழலியலாளர் வழமையாகப் பனி இல்லாத மலைப்பிரதேசத்தில் இம்முறை குளிர்கால ஒலிம்பிக் நடைபெறுவதால் அவர்கள் 49 மில்லியன் கலன் தண்ணீரைப் பனி (snow) தயாரிக்கப்பயன்படுத்தப் போகின்றனர் என அதிருப்தி தெரிவித்திருந்தனர். பிரான்சில்




உள்ள ஸ்ட்ராஸ்பேர்க் பல்கலைக் கழகத்தைச் (Strasbourg University) சேர்ந்த புவியியலாளரான பேராசிரியர் காமென் டி ஜொங் (Carmen de Jong) ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், “இந்த ஒலிம்பிக் விளையாட்டுகள் நடைபெறும் இடத்தில் உள்ள மலைகளில் இயற்கையாகப் பனிப்பொழிவு நடைபெறுவது இல்லை. இதனால் இதுவரை நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இதுவே சக்தியை விரயம் செய்யும் மிகவும் மோசமான ஒலிம்பிக்காக இருக்கலாம்” என்றார். இதற்கு பதிலளிக்கும்முகமாக சர்வதேச ஒலிம்பிக் நிர்வாகக் குழு (IOC), பெய்ஜிங் ஒலிம்பிக் விளையாட்டின்போது பனியைத் தயாரிக்கவும், மனித நுகர்விற்குப் பாவிப்பதற்காகப் பல நீர் சேமிப்பு மற்றும் மறுசுழற்சி வடிவமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளனர். அத்துடன் அருகாமையிலுள்ள பல இடங்களுடன் ஒப்பிடும்போது ஒலிம்பிக் நடைபெறும் யாங்கிங் (Yanging) பகுதியில் நீர்வளங்கள் பெருமளவு உள்ளன எனத் தெரிவித்திருந்தனர்.

ஒலிம்பிக் விளையாட்டு வீரரான கத்ரீன் மாட்டிங்கோ (Katherine Martinko) ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், 2014இல் ரஷ்சியாவில் உள்ள சோச்சி (Sochi) நகரத்தில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக்கின் போது ஒவ்வொருநாளும், ஓர் ஒலிம்பிக் நீச்சல் தடாகம் அளவு நீர் பனி தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதைச் சுட்டிக்காட்டினார். அவர் எப்போதும் செயற்கையாகப் பனியைத் தயாரிக்கும் போது பெருமளவு சக்தி விரயப்படுத்தப் படுகிறது என்றார்.

பெய்ஜிங் ஒலிம்பிக் நிர்வாகக் குழு இம்முறை நடைபெற உள்ள 2022ஆம் ஆண்டிற்கான குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்களுக்கான செலவீனம் $3.9 பில்லியன் அமெரிக்க டொலர் மட்டுமே என்றும், அது 2008ஆம் ஆண்டில் நடைபெற்ற கோடைகால ஒலிம்பிக் விளையாட்டிற்குச் செலவழித்த $43 பில்லியன் அமெரிக்க டொலரின் பத்தில் ஒருபங்கு கூட இல்லை எனவும் தெரிவித்துள்ளது. இம்முறை சீனாவில், பெய்ஜிங்கில் நடைபெறும் ஒலிம்பிக்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

# நாமும் நமது இல்லமும் 600

## ரொறொன்ரோவில் ஆதனக்கட்டுமானத்தில் புதிய முறை



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

### BACKYARD GRANNY FLATS

நாம் இருக்கும் ஆதனத்தின் நிலப்பகுதியில் புதியதொரு சிறுவீடு கட்டுவதற்கான சட்ட திருத்தத்தை ரொறொன்ரோ நகரம் கொண்டு வரவுள்ளது. அதாவது, ஏற்கனவே வீடு இருக்கும் நிலப்பகுதியின் பிற்பகுதியில் புதியதொரு ஆதனம் கட்டுவதற்கு ரொறொன்ரோ நகரசபை உப விதியில் மாற்றம் கொண்டுவர உள்ளது. பெப்ரவரி 2022இல் நடக்க இருக்கும் நகரசபை சந்திப்பில் இவ் உப விதி மாற்றம் நடை பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே ரொறொன்ரோ நகரில் தனி வீடுகளின் பெறுமதி $2 மில்லியன் என்ற விலையை அண்மித்துள்ளதால், சாதாரணமாகத் தொழில்புரியும் குடி மகனிற்கு எதிர்காலத்தில் தனிவீடு என்பது முயல்கொம்பாக மாறலாம். அத்துடன் அதிக மக்களைக் குடியேற்ற வேண்டும் என்பதால் நகரசபை பல விதிகளை மாற்ற எண்ணுகின்றது. இதன் முதல்கட்டமாக Backyard Granny Flats நடைமுறைப் படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த Granny Flatsஐ Accessory Dwelling Units (ADU) என்றும் அழைக்கப்படலாம். இவ்வாறு மேலதிக சிறிய வீடு கட்டுவதால் பாவிக்காமல் இருக்கும் ஒருபகுதி நிலம் பாவிக்கப்படும். அத்துடன் ஏற்கனவே இருக்கும் Utilitiesஐ உபயோகிக்கக் கூடிய வசதிகளும் ஏற்படுத்தப்படலாம்.

வீட்டுச் சொந்தக்காரர் குறைந்த செலவில் கட்டுவதனால், மேலதிக வருமானத்தையும் பெறக்கூடிய வசதிகள் ஏற்படும். மாதாந்திர கொடுப்பனவில் சிறிய நிவாரணம் கிடைக்கக் கூடிய வசதி ஏற்படும். புதிய நகர அமைப்பில் இவ்வாறான மாற்றங்கள் மிகவும் முக்கியமாக காணப்படுகின்றது. இது ஓர் ஆரம்பமாகவே கருதலாம்.

பத்து (10) வருடங்களிற்கு முன்பாக இவ்வாறான முன்னேற்பாடு கனவாகவே இருந்தது. ஆண்டிற்கு 400,000இற்கு மேற்பட்ட புதிய வரவாளர்களின் கனடிய வருகையில் 100,000இற்கு மேற்பட்டோர் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் குடி அமர்வதால் இவர்களிற்கான இடவசதியை அமைத்துக் கொடுக்க வேண்டிய நிலையில் நகரசபை தள்ளப்படுகின்றது.

இவ்வாறான ஏற்பாடு ஏற்கனவே அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் 2017இல் சட்டமாக்கப்பட்டுள்ளது. வட அமெரிக்காவில் ரொறொன்ரோ நகரம் மிக முக்கிய தகவல் தொழில்ப்ப நகரமாக மாறிவருவதால், இவ்வாறான மாற்றம் முக்கியமானதாக நகர அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மிகப்பெரிய நிலம் பாவிக்கப்படாமல் இருக்கின்றது. இந்த நிலத்தை



பாவிப்பதற்கு இது சிறந்த முறையாக இருக்கும் என்பது சமூக ஆர்வலர்களின் தீர்க்கமான முடிவாகக் காணப்படுகின்றது. பெப்ரவரி 2022இல் நடைபெற இருக்கும் நகரசபைக் கூட்டத்தில் இந்த உபவிதி மாற்றம் எவ்வாறு இருக்கும் என்பதனைப் பார்ப்போம்.

கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் பொருளாதார எதிர்வு கூறுபவர்களின் கூற்றை மறுதலிப்பது போல ஜனவரி 26, 2022இல் கூடிய கனடிய மத்திய வங்கியின் ஆளுநர் திரு. ரிவ் மக்கெலம் (Tiff Macklem, Governor - Bank of Canada) கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதத்தை மாற்றாமல் ஏற்கனவே இருந்த 0.25% என்ற பெறுமதியிலே விட்டுள்ளார்.

எனினும் மார்ச் மாதத்தில் இந்த அமைப்பு கூடும்போது வட்டி வீதம் அதிகரிக்கப் படலாம் என எதிர்வாளர்கள் ஆரூடம் தெரிவிக்கின்றனர். ஒமிக்ரோனின் (Omicron) பாதிப்பு, பொருளாதார நிலைமை, பணவீக்கம், ஆதன வியாபாரம் போன்றவற்றை பொறுத்தே மார்ச் 2022இன் வட்டி வீத அதிகரிப்பு அமையும் என எதிர்பார்க்கலாம்.

**NOTE : Bank of Canada Interest Rate 0.25%. Prime Rate 2.45%**




## இன்புடன் வாழலாம்



நடந்துநீ திரிந்தால் நலனுன்னைச் சேரும்
கிடந்துநீ இருந்தால் கிழடுன்னை நாடும்
பழங்களை உண்டால் பலனுன்னை சேரும்
இழப்புகழ் தவிர்க்க இயற்கையை நாடு!

பயிற்சிகள் செய்தால் உயர்ச்சியைத் தொடுவாய்
அயர்ச்சிநீ அடைந்தால் முயற்சிகள் விடுவாய்
தளர்ச்சியை தவிர்த்தால் தலை உயர்ந்திடுவாய்
வளர்ச்சியை நினைத்து வாழ்வினை அமைப்பாய்!

போதனை கேட்டிடல் சாதனை ஆகுமே
வேதனை போக்கிட விரும்பிடு நீயுமே
மாதினை மயக்கத்தை வரையறை செய்திட்டால்
காசினி மீதிலே மாசின்றி வாழுவாய்!

இறைவனை எண்ணினால் இன்புடன் வாழலாம்
குறையெலாம் அகன்றுநீ நிறைவுடன் வாழலாம்
கறையுடை மனத்தினை காணாமல் செய்திடில்
உலகினில் உன்னதம் உன்னுளே உதித்திடும்!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

# MORTGAGE & LINE OF CREDIT

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்
வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC

www.mortgageclinicccanada.com

416-613-2788 / 416-816-9011



ஜெ(Jey)இராசதுரை
MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage
& Real Estate Broker

Cell : 416-624- 4843



RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

Notarizations, Certifications & Commissioning

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services
AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

Call:(416) 814 -7450
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students
$20per sign

# 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டமும், விளக்கங்களும்!




இலங்கை - இந்திய உடன்பாட்டின் மூலம் உருவான 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கக் கோரி தமிழ் தேசியக் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடித ஆவணத்திற்கு எதிராக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி களத்தில் இறங்கிப் போராட்டங்களை நடத்தி வருகின்றது. இந்நிலையில், தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் விதமான ஊடக சந்திப்பு ஒன்றை சம்பந்தப்பட்ட தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழீழ விடுதலை இயகத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் ஜனநாயக முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன் மற்றும், சிறீகாந்தா உள்ளிட்டோர் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினர். இதன்போது, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்களை குழப்புகின்றது என்றும், இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலுக்குச் சார்பாக நடந்துகொள்வதாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்த கருத்துக்களை சுருக்கமாக இங்கு பார்ப்போம்.

13ஆம் திருத்தம் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வினைத் தராது என்பதில் நாம் தெளிவாக இருக்கின்றோம். இந்த நிலையில் கஜேந்தரகுமார் கட்சி தங்களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதாக நினைத்து, தமிழ் மக்களைக் குழப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டு பேரணிகளை நடத்துகின்றது என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.



சமஸ்டி கட்டமைப்பில், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வையே தாங்கள் எதிர் பார்ப்பதாகவும், தாங்கள் தெளிவாக சிந்தித்து இந்த முடிவை எடுத்துள்ள நிலையில் 13ஆம் திருத்தம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வினைத் தராது என்பதில் தெளிவாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஒரு கட்சி எமக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதாக நினைத்து, தமிழ் மக்களைக் குழப்புவதற்காகப் பேரணிகளை ஏற்பாடு செய்துள்ளது. நாம் இந்தியாவுக்கு சோரம் போகமாட்டோம். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாம் அவர்களிடமிருந்து பெற வேண்டியதைப் பெறுவோம் என்றும் அவர் கூறினார்.

வட மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய நாடாளு மன்ற உறுப்பினருமான தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் கருத்து வெளியிடுகையில், தமிழ் மக்களுக்கான நிரந்த தீர்வு ஒன்று வரும்வரை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும், இடையில் ஓர் அதிகாரம் கிடைக்காவிட்டால் தமிழ் பிரதேசங்கள் முழுமையான சிங்களப் பிரதேசங்களாக மாறும் ஆபத்து உள்ளது என்றும் கூறினார்.

13ஆம் திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக எதிர்க்கும் சைக்கிள் கட்சிக்காரர் அந்த திருத்தச் சட்டத்தின் மூலமாகக் கிடைத்த மாகாண சபையில் போட்டியிடுகின்றனர், முதலமைச்சராக வர வேண்டும் என்று சண்டையிடுகின்றனர் இது கேலிக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோட்டாபய அரசாங்கம் நினைக்கும் விடயங்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் வடக்கில் நிறைவேற்று கின்றனர் என ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தினை நாம் தமிழரின் தீர்வாக ஒரு போதும் ஏற்க வில்லை அதனை ஏற்கப் போவதும் இல்லை. ஆனால், தற்போதுள்ள பூகோள அரசியல் நிலையில் வடக்கில் இராணுவ மயமாக்கல், சிங்கள குடியேற்றங்களைத் தடுத்து தமிழ் மக்களின் உரிமையை பாது காப்பதற்காக ஏற்கனவே இந்தியாவின் தலையீட்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அரசியல் சாசனத்தில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை அமல்படுத்துமாறு கோரியே ஆறு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியப் பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளோம். அந்தக் கடிதத்தின் தொடர்ச்சியாக நாம் டெல்லி சென்று இந்திய பிரதமரை சந்தித்து அடுத்த கட்டமாக முன்னெடுக் கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் கோட்டாபய அரசாங்கம் எதை செய்ய நினைக்கின்றதோ அதனை வடக்கில் நிறைவேற்றுகின்றர். அதாவது தற்போதைய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கான வடக்கின் முகவர்களாக செயற்படுகின்றனர் என்றுதான் கூற வேண்டும் என்றும் தெரிவித்த சுரேஸ் பிரேமச்சந்திரன் கட்சியிலிருந்து மணி வண்ணன் பிரிந்து சென்றுவிட்டதால் தமது கட்சியை மணிவண்ணன் கொண்டு சென்று விடுவார் என்பதற்காக கட்சியில் உள்ளோருக்கு ஏதாவது ஒரு வேலையை கொடுக்க வேண்டும் என்பதற்காக 13ஆவது திருத்தச் சட்டத்தினை சவப் பெட்டியில் வைத்து மக்கள் மத்தியில் ஊர்வலமாக கொண்டு செல்கின்றனர். அவர்கள் தமது கட்சியை காப்பாற்றுவதற் காக இவ்வாறு போலி பிரச்சாரத்தினை மேற்கொள்கின்றனர். எனவே, மக்கள் இவ்வாறான போலிப் பிரச்சாரங்களை நம்பக் கூடாது எனவும் கூறினார்.



பொய் பிரச்சாரம் மேற்கொள்ளும் கஜேந்திரகுமார் கட்சியினர் என்ன தீர்வினை முன்வைக்கப் போகிறார்கள் அல்லது தீர்வு விடயத்தில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள் என்று கூற முடியுமா என சித்தார்த்தன் கேள்வி எழுப்பியுள்ளார். அத்தோடு, கஜேந்திர குமார் அணியினர் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். யாரை முதலமைச்சராக முற்படுத்துவது என்பது தொடர்பில் கட்சிக்குள் போட்டி காணப்படுகின்றது. அவ்வாறான நிலையில் ஏன் இவ்வாறு மக்களை குழப்பும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர் எனத் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்று ஒன்றுமே இல்லாமல் இருக்கும் இடத்தில், சட்ட ரீதியாக அமையப் பெற்றுள்ள ஒன்றை அமல்படுத்துமாறு கோருகின்றோம். 13ஆவது திருத்தத்தை முதலில் அமல்படுத்தினால், அதிலுள்ள சிறிய விடயங்களை என்றாலும் நாம் பெறுவதற்கு முயற்சிக்கலாம் என தமிழ் தேசிய கட்சியின் தலைவர் சிறீகாந்தா தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு வருமா வராதா என்பதை உறுதியாக கூற முடியாது. அப்படி வந்தாலும் அதில் சிங்கள, பௌத்த மேலாதிக்கம் மட்டுமே இருக்கும். இந்திய - இலங்கை ஒப்பந்தம் ராஜீவ் காந்தி காலத்தில் எழுதப்பட்ட போது தமிழ் மக்களின் தீர்வு தொடர்பில் அன்று வாக்குறுதி வழங்கப்பட்டது. அதன் உரித்து இந்தியாவுக்கு இருக்கிறது என்பதன் அடிப்படையிலேயே நாம் இந்தியப் பிரதமர் மோடிக்குக் கடிதம் அனுப்பியுள்ளோம். 13ஆவது திருத்தம் தமிழ் மக்களின் முழுமையான பிரச்சினைக்கு தீர்வு தரும் என ஒரு நாளும் நாம் கூறவுமில்லை, ஏற்றுக் கொள்ளவும் இல்லை. 13ஆவது திருத்தத்தை முதலில் அமல்படுத்தினால், அதில் உள்ள சிறிய விடயங்களையேனும் நாம் பெறுவதற்கு முயற்சிக்கலாம்.

எமது தமிழ் மக்களின் இருப்பு தற்போது அழிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக சிங்களக் குடியேற்றம் வேகமாக இடம் பெற்று வருகிறது. ஆகவே, இருக்கிறதை யாவது முதலில் அமல் படுத்துங்கள் எனக் கோருகின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கஜேந்திரகுமார் கட்சியினர் வடக்கில் 13ஆம் திருத்தச்சட்டத்திற்கு எதிரான பரப்புரைகளையும், பேரணிகளை யும் நடத்தி வருகின்றனர். 13ஆம் திருத்தச் சட்டத்தை எதிர்ப்பதை விடவும், ஆறு கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடித ஆவணத்தை காரணம் காட்டி சம்பந்தப் பட்ட கட்சியினரை 'தமிழ் துரோகிகள்' என அடையாளப்படுத்தும் வேலைத் திட்டத்தை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.


கடுமையான ஆயுதப் போராட்டம் ஒன்று தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், அறிவு சார்ந்த, இராஜதந்திர வழிமுறையை கடைப்பிடிக்க வேண்டிய நிலையிலேயே தமிழ் மக்களின் அரசியல் உள்ளது. இந்த நிலையில் தமிழ் மக்கள் தாங்களாக சிந்தித்து ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். கட்சிகளின் சுயநலன் களுக்குள் மக்கள் சிக்கிக்கொள்ளக் கூடாது. இன்று தலைவர்கள் என்று தமிழ் மக்களுக்கு எவரும் இல்லை. தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதி நிதிகளே உள்ளனர். அவர்களை வழி நடத்துவது மக்கள் கைகளிலேயே உள்ளது.

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# மகிழ்ச்சி வாழ்வின் பாதி பலம்



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி – இலங்கை

மகிழ்ச்சி என்பது ஒரு விடுதலை நிலை. மகிழ்ச்சி உள்ளத்தின் ஓர் உணர்ச்சி. “வாழ்க்கையில் நாம் நல்ல மனநிலையில் இருப்பதும், அத்துடன் எந்த அளவு மன நிறைவுடன் இருக்கிறோம் என்ற இவ்விரு நிலைகளின் கலவையே மகிழ்ச்சி” என்கிறது அறிவியல் ஆய்வுகள். இருக்கும் வரையே இந்த வாழ்க்கை. இதற்கிடையில் எத்தனை வேட்கை.

ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வ தாகக் கொண்டிருக்கும் நிறைவான மன நிலையும், அமைதியான மனமும் பெரும் பாலும் மாறாதவகையில் நிலைத்த மகிழ்ச்சியைத் தரவல்லது. மனித வாழ்க்கையின் ஒரே குறிக்கோள் மகிழ்ச்சி யாக இருப்பது. ஆதிகாலம் தொட்டு அலைவதுதான். சிலருக்கு அது கிடைக் கிறது. பலருக்கு அது தொலைந்ததாக உள்ளது. நாம் வாழும் வீட்டில் எத்தனை வசதி இருக்கிறது என்பதைவிட எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறோம் என்பதுதான் முக்கியம். உங்களை மற்றவர்களுடன் நீங்கள் ஒப்பிடுவதை நிறுத்தினாலே உங்களில் மகிழ்ச்சி வெளிப்படும்.

குடிக்கு அடிமையானவன், கொள்ளைக் காரன், கடத்தற்காரன், ஊழலில் ஈடுபடுப வன், கற்பழிப்பு, களவு, சமூகச் சீரழிவு களில் ஈடுபடுவோர் தம் வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தேடினாலும் காண முடியாது. சிலர் பணம் வந்தால் மகிழ்ச்சி தான் என நினைக்கலாம். அதிக பணம் என்றால் அதிக மகிழ்ச்சி என்ற சமன்பாடு வாழ்க்கையைப் பொறுத்தவரையில் ஒத்து வராத கணக்கு. உண்மையில் வாழ்க்கை இன்பம் தரும் கலை. வாழ்க்கையை எவ்விதம் கையாளுகிறோமோ அவ்விதம் அதன் பலனை அடைய முடியும். நமக்கென்று அமைக்கப்பட்ட வாழ்க்கையை நேர்மையாக வாழ்ந்து மகிழ்ச்சி கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் தத்தம் தனிப்பட்ட விருப்பங்கள், ஆசைகள் நிறைவேறும் போது மகிழ்ச்சியைத் தரும். ஒருவருக்கு தொழில் கிடைத்தல், புது மனை கட்டுதல், வாங்குதல், வாகனம் வாங்குதல், காதல் நிறைவேறுதல், குழந்தை கிடைத்தல், திருமணம் நடத்தல் ஆகிய நம்மால் முடிக்கப்பட்ட நிகழ்வுகளால் அந்நாளில் மகிழ்ச்சி அடையலாம். துன்பத்தை தவிர்ப்பதன் வழியாகவும் மகிழ்ச்சியை அடையலாம். எமக்கான கடமைகளை நிறைவேற்றி இருக்கிறேன் என்ற உணர் வுடன் வாழ்க்கையை நகர்த்துவதே அபார மகிழ்ச்சி தரும் விடயமாகும். உங்களது மென்திறன்கள், உங்கள் எதிர்கால தொழில் வெற்றிக்கு மட்டுமல்ல சுய வெற்றிக்கும், மகிழ்ச்சிக்கும் மிகவும் முக்கியமானது. மகிழ்வாக இருக்க, முயற்சி எடுத்து காரியமாற்றும் மனபக்குவ மும் தேவை. வாழ்க்கை என்ற புத்தகத்தில் சிலபக்கங்கள் துக்கத்தைத் தரலாம். அதற்காக படிப்பதைப் பாதியில் நிறுத்தி விடக்கூடாது. அடுத்த பக்கங்கள் மகிழ்ச்சியைத் தரலாம். அதனால் படித்துக் கொண்டே இருக்க வேண்டும்.



எது இல்லையோ அதை நினைத்து வருத்தப்படுவோர் இங்கு அதிகம். எது இருக்கிறதோ அதை நினைத்து மகிழ்ச்சி அடைவோர் குறைவு. “உனக்கும் கீழே உள்ளவர்கள் கோடி அதை நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு” இது கவியரசர் கண்ணதாசன் பாடல் வரிகள். மகிழ்ச்சி நிலைக்க நிறைவான மனம், எவ்வித மாறுதலாலும் பாதிப்படையாத மனம் என இவ்விரு வகையான எண்ணங்களும் இணைந்திருக்க வேண்டும். வாழ்க்கை நிலை மாறலாம். உணர்வுகளும் மாறிக் கொண்டே போகலாம். ஆனால் இருப்பதைக் கொண்டு வாழும் நிறைவான மனநிலையும், எதற்கும் அசைந்து கொடுக்காத மனநிலையும் மகிழ்ச்சியைத் தக்கவைக்கும். தொடர் பயிற்சியால், விடா முயற்சியால் நாம் மகிழ்ச்சியான மன நிலையை அடைய எம்மை பழக்கப் படுத்திக் கொள்வதில் அக்கறை குறைவு. மனதைக் கட்டுப்படுத்தும் திறன் எம்மிடமே உள்ளது. இதைக்கொண்டு நிலையான மகிழ்ச்சியை அடையலாம் என்பது அறிவி யல் கூறும் முடிவு. மன மகிழ்ச்சி என்பதற்கு இறுதி இலக்கு இல்லை. அது நகர்ந்துகொண்டே இருக்கும். இலக்கை அடைந்துவிட்டோம் என நினைத்து மகிழ்ந்தாலும், பின் மகிழ்ச்சியைத் தேடிப் பயணம் தொடரத்தான் செய்யும். மகிழ்ச்சியாக இருப்பது திடீரென்று நடந்து விடுவதில்லை.

“மகிழ்ச்சி வாழ்வின் வளர்ச்சி. மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால், வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமையாகிவிடும்” என்றார் பெர்னாட்ஷா. மகிழ்ச்சி இன்றி எந்தவொரு சாதனையும் நடந்ததில்லை என்றார் தத்துவமேதை எமர்சன். வாழ்க்கையின் மகிழ்ச்சியைக் கூட்டுவது மகிழ்ச்சி. மகிழ்ச்சி முகமலர்ச்சி யுடன் இருந்தால், எந்தக் காரியத்தையும் எளிதில் சாதித்துவிடலாம். இப்படியான முகத்தைப் பார்ப்பது அருமை. மலர்ந்த முகம் சாதாரண உணவையே விருந்தாக்கி விடும் என்பது இங்கிலாந்துப் பழமொழி. “ஒருவன் சிரிக்கும்போதெல்லாம் மரணம் ஒத்திபோடப்படுகிறது” இது இத்தாலியப் பொன்மொழி. மனிதனுக்கு ஒளியைக் கொடுக்கக்கூடியது மகிழ்ச்சிதான்” என ஸ்ரீவன்சன் கூறியுள்ளார். பிறரது அவமானத்தில் மகிழ்ச்சி கொள்வோரும் உள்ளனர். தாங்களும் அந்தச் சந்தர்ப்பத்துக் காக காத்திருப்பதை மறந்து விட்டனர். இது கவியரசர் கண்ணதாசன் கூற்று.

மகிழ்ச்சியும், மனநிறைவும் மிக்க வாழ்வு குறித்தே ஒவ்வொரு மனிதனும் கனவு காண்கின்றான். சமூக முதலீடான மனித மனம் ஆரோக்கியமாக, மகிழ்ச்சியாக இருந்தால் தான் ஆரோக்கியமாகச் சிந்திக்க முடியும். அவ்வாறான சிந்தனைதான் நல்ல விளைவுகளைக் கொண்டு வரும். “மகிழ்ச்சியால் குணப்படுத்த முடியாத நோயை, உலகில் எந்த மருந்தாலும் குணப்படுத்த முடியாது” என்கிறார் கொலம்பிய எழுத்தாளர் கப்ரியல். சோகங்களை அழித்தால் மகிழ்ச்சி எண்ணம்தான் மகிழ்ச்சியை அளிக்கும் சக்தி. வாழ்வின் சுறுசுறுப்பு உடற்பயிற்சி, ஆரோக்கிய மனநிலை, சுகாதார சுற்றுச்சூழல், நகைச்சுவை உணர்வு, உண்மையின் உறவுகள், அளவான செல்வம், பிறர் நலன் பேணல், நேர்மறை நடத்தை, சமூகவலைத் தளங்களால் அடித்துச் செல்லப்படாமை போன்ற காரணிகள் மனிதனின் மகிழ்ச்சிக்கு வழிவகுக்கின்றன. மகிழ்ச்சி தனை, தன் வாழ்வில் பெறுவது மட்டு மன்றி, பிறரையும் மகிழ்விப்பது மகிழ்ச்சி யின் உச்சமாகும். மகிழ்ச்சி மகிழ்ச்சியே வெற்றிக்குத் திறவுகோல். மகிழ்ச்சி என்ற திரியை வைத்துக்கொண்டே வாழ்க்கை என்ற விளக்கை ஏற்ற முடியும்.

மகிழ்ச்சியை ஒத்திவைக்கக் கூடாது. மகிழ்ச்சியைத் தேடி செல்வத்துக்குப் பின்னால் ஓடி மிச்சம் மீதி இருக்கும் கொஞ்சநஞ்ச மகிழ்ச்சியையும் தொலைத் தோர் அதிகம். உங்கள் மகிழ்ச்சி எது என்று தேர்வு செய்யும் உரிமை உங்களிடம்தான் உள்ளது. உங்கள் மகிழ்ச்சி எது? அது உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதாக இருந்தால் அதன் வழி செல்லுங்கள். வாழ்வின் பாதிபலம் மகிழ்ச்சி என்பதை மனதில் நிறுத்தி வாழுங்கள். வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும்.

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228



Mr.S.J.Xavier (Teacher)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
STORE Tel: 416-289-7514
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இன்னல் நீக்கும் இயற்கை - 82



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே!

நோய்களைத் தீர்க்கும் அல்லது நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகள் சிலவற்றைத் தொடர்ந்து அறிந்து கொள்வோம்.

**சமிபாட்டுப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்குரிய வழிமுறைகள்:** கொய்யாப் பழம் சாப்பிட்டு வந்தால் ஜீரண சக்தி அதிகரிக்கும். ஓமம், உப்பு இரண்டையும் ஒரு வெற்றிலையில் வைத்து மென்று சாப்பிட வேண்டும். உணவு உண்ட பின்பு கொய்யாப்பழம் சாப்பிட்டு வர அஜீரணம் அகலும். சுக்கு, மல்லிக் கசாயம் உணவுக்கு முன் குடிக்க வேண்டும். பூசணித் துண்டுகளை நெய்யில் வறுத்துச் சாப்பிட சமிபாட்டுக் குறைபாடு நீங்கும். மலச்சிக்கலும் நீங்கும். பிரண்டைத் துவையல் சமிபாட்டுக் குறைபாட்டை நீக்கிப் பசியை உண்டாக்கும்.

**நீரிழிவு நோயிலிருந்து நிவாரணம் பெறுவதற்கான வழிமுறைகள்:** சவ்வரிசிக் கஞ்சியில் மோர், உப்பு கலந்து குடித்து வரப் பலன் கிடைக்கும். நீரிழிவு நோய் உள்ளவர்களுக்குத் தக்காளி உகந்த உணவாகும். சிறுகுறிஞ்சான் பொடி, நாவல் விதைப்பொடி இரண்டையும் சமவளவில் கலந்து காலை, மாலை இரு வேளையும் நீரிழிவு நோயுள்ளவர்கள் சாப்பிடலாம்.

ஒற்றைத் தலைவலி நீங்க வழிமுறைகள்: மிளகை அரைத்து நெய்யுடன் கலந்து சாப்பிட வேண்டும். மருதாணி இலைச் சாற்றை நெற்றியில் பூசிவர வேண்டும். பூண்டுகளை இடித்துச் சாறாக்கி நெற்றியில் பூச வேண்டும். 100 கிராம் நெய்யுடன் 200 கிராம் வெல்லம் கலந்து சாப்பிட வேண்டும்.

**மூலநோய்ப் பிரச்சினைக்கு வழிமுறைகள் :** ஒரு தேக்கரண்டி அளவு கடுக்காய்த் தூளுடன் வெல்லம் கலந்து உணவுக்கு முன் சாப்பிட்டு வர மூலநோய் குணமாகும். வெந்தயக்கீரை உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும். சுக்கு, வெல்லப்பொடி கலந்து இருவேளை உண்டுவருதல் வேண்டும். காலை, மாலை மஞ்சள் தூளை வெந்நீரில் கலந்து குடிக்க வேண்டும். வெள்ளை முள்ளங்கிச் சாற்றில் தேனும், நெய்யும் கலந்து தினமும் இரண்டுவேளை உண்ண வேண்டும்.

**மூட்டுவலியைக் குறைப்பதற்கான வழி முறைகள்:** ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு தடவை கற்பூரத்தைலம் தடவி வரலாம். கடுகு எண்ணெய்யில் இடித்த இரண்டு பூண்டுகளைக் கலந்து கொதிக்க வைத்து ஆறவிட்டுப் பூசி வர மூட்டுவலி குறையும்.

**வெட்டுக்காயத்தை ஆறச் செய்வதற்கான வழிமுறை:** மருதாணி அல்லது மஞ்சள் பொடியை வைத்துக் கட்ட வேண்டும்.

**இருமல் போக்க வழிமுறைகள்:** பெரும் சீரகப்பொடி, தேன், நெய், மிளகுத்தூள் நான்கையும் கலந்து சாப்பிட நாட்பட்ட



இருமல் குணமாகும். வாழைக்காயை வதக்கி ஆறியபின் சாப்பிடுதல் நல்லது. உலர்ந்த திராட்சைக் கசாயம் குடித்து வர இருமல் குறையும். வெற்றிலை, பாக்கு சாப்பிட இருமல் குறையும். சீரகத்தை பொன்நிறமாக வறுத்து கற்கண்டு சேர்த்து சாப்பிட வேண்டும். மிளகு, திப்பிலி, சுக்கு ஆகியவற்றை சமவளவில் கலந்து பொடி செய்து 2 கிராம் அளவில் தேன் கலந்து சாப்பிட இருமல் குறையும். அதிமதுரத்தை வாயில் போட்டு உமிந்து கொண்டுவர இருமல் குறையும். மிளகுத் தூளை தேனில் கலந்து சாப்பிடுதல் நல்லது. இஞ்சியை சிறுதுண்டுகளாக வெட்டித் தண்ணீருடன் வேகவைத்து கற்கண்டு சேர்த்துக் குடிக்க வேண்டும். முற்றிய வெண்டைக்காயை சூப் செய்து குடித்து வந்தால் இருமல் குறையும்.

**ஆஸ்த்மா நீங்க வழிவகைகள்:** இஞ்சித் தேநீருடன் பூண்டுகளை நசுக்கிக் கலந்து குடித்தல் நல்லது. கடுகு எண்ணெய்யில் இஞ்சியை மைய அரைத்து மார்பில் பூசி வருதல் நல்லது. ஆவிவரும் அளவில் கொதித்த நீரில் ஓமம் கலந்து ஆவியை நுகர்ந்து உள்ளிழுக்க நிவாரணம் கிடைக்கும். இரண்டு தேக்கரண்டி வேப்பம் எண்ணெய்யில் வெற்றிலைச் சாறு கலந்து சாப்பிட்டு வரக் குணமாகும்.

இதய நோய்கள் குணமாக வழிவகைகள் இரவில் வெந்தயத்தை ஊறவைத்து காலையில் உண்டுவருதல் நல்லது. உலர் திராட்சை சாறு பருகிவருதல் நல்லது. தேநீர் பருகுதல் நல்லது.

**இரத்த அழுத்தம்:** எண்ணெய்களில் நல்லெண்ணெய்யைப் பயன்படுத்துவது நல்லது. வெள்ளைப் பூண்டும் மிளகும் உணவில் சேர்த்தல் நல்லது. ஒரு தேக்கரண்டி வெங்காயச் சாற்றுடன் தேன் கலந்து சாப்பிடுதல் இரத்த ஓட்டத்தைச் சீராக்கும்.

**சளி:** ஒரு தேக்கரண்டி மஞ்சள் தூளை வெந்நீரில் கலந்து தினமும் மூன்று வேளை குடித்து வர மார்புச்சளி நீங்கும். கற்பூரவல்லிச் சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட வேண்டும். தேங்காய் எண்ணெய்யில் சிறிதளவு கற்பூரம் சேர்த்து நெஞ்சில் தடவ சளி நீங்கும்.

**நோய் எதிர்ப்புச் சக்தி:** அடிக்கடி சீரணக் கோளாறு இருந்தால் இனி வீட்டில் சாதாரணத் தண்ணீருக்குப் பதில் உணவு அருந்துகையில் இளஞ்சூட்டில் சீரகத் தண்ணீர் அருந்தலாம். சீரகத்தை வாயில் போட்டு குளிர்ந்த தண்ணீரை குடித்தால் தலைச்சுற்றல், மயக்கம் நீங்கி விடும். சீரகப் பொடியை வெண்ணெயில் குழைத்து சாப்பிட எரிச்சலுடன் கூடிய அல்சர் நோய் தீரும். இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். சீரகத்தை லேசாக வறுத்து, அத்துடன் கருப்பட்டி சேர்த்துச் சாப்பிட்டு வர, நரம்புகள் வலுப்பெறும். நரம்புத் தளர்ச்சி குணமாகும். அகத்திக் கீரையுடன், சீரகம், சின்ன வெங்காயம் சேர்த்து கசாயம் செய்து கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டால் மன அழுத்தம் மாறும்.

**கடுகு:** ஏராளமான மருத்துவ குணங்களை கொண்டது கடுகு. கோடை காலங்களில் உடலில் ஏற்படும் கட்டிகளுக்கு கடுகு அரைத்துப் பூசினால் சுகமாகும். கடுகு விதைகளில், உடலுக்கு தேவையான எண்ணைச்சத்து உள்ளது. மேலும் அத்தியாவசிய அமிலங்களும் நிறைந்துள்ளன.

கடுகு அதிக கலோரி ஆற்றல் தரக் கூடியது. கெட்ட கொழுப்பை கட்டுப்படுத்தும் ஆற்றலும், உடல் பருமனைக் குறைக்கும் ஆற்றலும் கடுகிற்கு உண்டு. இருமலை கட்டுப்படுத்தக் கூடியதும், விஷத்தை முறிக்கவல்லதும், சமிபாட்டுக் கோளாறுகளைச் சரிசெய்யக் கூடியதும், ஒற்றைத் தலைவலியைப் போக்கும் தன்மை கொண்டதும், விக்கலைக் கட்டுப் படுத்தக் கூடியதும், ரத்தத்தை சுத்தப் படுத்தக் கூடியதுமானது கடுகு. சமையலுக்கு மிகவும் முக்கியமான பொருளாக விளங்குவது கடுகு. பல்வேறு நன்மைகளை கொண்ட கடுகு உள் உறுப்புகளை தூண்டும் தன்மையை உடையது. பசியை தூண்டக் கூடியது.

அன்பான விளம்பரம் வாசகர்களே!

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.




Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth

# ‘ரேக்ளா ரேஸ்’ ஓரம்போ மேலூரு வண்டி வருது!

- தளவாய் சுந்தரம் -

தமிழ்நாட்டில் மதுரை மாவட்டம் முழுக்க பொங்கலை ஒட்டிய பத்துப் பதினைந்து நாட்கள் உற்சாகப் பரபரப்புதான். ஜல்லிக்கட்டு, மாட்டுவண்டிப் பந்தயம், ‘ரேக்ளா ரேஸ்’, சேவற்கட்டு, ஆட்டுக்கடா முட்டு என்று கிராமங்களின் வீதிதோறும் வீர விளையாட்டுகளால் திருவிழா கோலத்தில் இருக்கும். இந்த ஆண்டும் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு இடையேயும் திருவிழா கோலம் பூண்டுள்ளது மதுரை!

ஜல்லிக்கட்டு, மாட்டுவண்டிப் பந்தயம், சேவற்கட்டு, ஆட்டுக்கடா முட்டு சரி ‘ரேக்ளா ரேஸ்’ எப்படி? தமிழர்களுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

‘ரேக்ளா என்பதற்கு ஒருவர் மட்டும் உட்கார்ந்து செல்லும் வண்டி என்று அர்த்தம். அந்தக் காலத்தில், அரேபியக் குறுநில மன்னர்கள் யாராவது ஓர் இளவரசியைக் குறிவைத்துக் கவர்வதற்காகக் குதிரை வண்டியில் ஒருவரையொருவர் முந்தி போட்டி போட்டுக் கொண்டு செல்வார்களாம். முதலில் செல்பவருக்கு இளவரசி. இரண்டு மூன்று பேர் வண்டியில் உட்கார்ந்தால் குதிரை வேகமாக இழுக்காது என்று ஓர் ஆள் மட்டும் உட்காரக்கூடிய வண்டியை உருவாக்கியிருக்கிறார்கள். அப்புறம் அரேபியர்கள் இந்தியா வந்தபோது இந்தக் குதிரைவண்டிப் பந்தயமும் கூடவே வந்துவிட்டது. இதுதான் நம் சௌகரியத்துக்கு மாட்டுவண்டிப் பந்தயமாகவும் மாறியிருக்க வேண்டும்’ என்று சொல்கிறார்கள் வரலாற்று ஆய்வாளர்கள்.

தமிழ்நாட்டில் நடைபெறும் ரேக்ளா ரேஸுக்கு இரட்டை மாட்டுவண்டிப் பந்தயம், ஒற்றை மாட்டு வண்டிப் பந்தயம். கைப்புறா என்று பல வடிவங்கள் உண்டு. இதில் கைப்புறா பந்தயம் வண்டி இல்லாமல், தனி ஒரு மாட்டை ஓர் ஆள் பிடித்து விரட்டிக் கொண்டு செல்வது. ஒற்றை மாட்டுவண்டிப் பந்தயத்தில் வண்டி கொஞ்சம் வித்தியாசமானது. மிதிவண்டி சக்கரங்களால் ஆனது. ஆனால், இரட்டை மாட்டுவண்டிப் பந்தயம்தான். மதுரை மக்கள் மத்தியில் மிகவும் பிரசித்தி பெற்ற போட்டி!



இந்தப் போட்டி மேலூர், அவனியாபுரம், மேலமடை, கடச்சனேந்தல், குலமங்கலம், உறங்கான்பட்டி கோட்டநத்தம்பட்டி, வெள்ளலூர், கீழையூர், கீழவளவு நரசிங்கம்பட்டி, அழகர்கோயில், வள்ளாலப்பட்டி போன்ற ஊர்களில் வருடம் தோறும் தவறாமல் நடத்தப்படுகின்றன.

தேனி, தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலும் இந்த ‘ரேக்ளா ரேஸ்’ உண்டு என்றாலும் மேலூர் ரேக்ளா கொஞ்சம் பிரசித்தம்!

‘இங்கே வெற்றி பெறுவது ஒலிம்பிக்கில் வெற்றி பெறுவது மாதிரி’ என்கிறார், முன்னாள் ‘ரேக்ளா ரேஸ்’ வீரரும் தமிழ்ப் பேராசிரியருமான பூமிச்செல்வம். மார்பில் நிறைய வீரத் தழும்புகள் சேகரித்து வைத்திருக்கிறார்! எல்லாம் ‘ரேக்ளா ரேஸ்’ உபயம்!

முதலில் மாடுகளின் தரத்துக்கேற்ப பந்தயத் தூரத்தைக் கணக்கிடுகின்றனர்.

பெரிய மாடு என்றால் தூரம் பத்து மைல், நடு மாடு என்றால் எட்டு மைல், கரிச்சான் மாடு ஆறு மைல், பூச்சிட்டு மாடு ஐந்து மைல், தேன்சிட்டு மாடு நாலு மைல், மாஞ்சிட்டு மாடு மூன்று மைல். இவற்றில் மாடுகள் ஓடும் தூரம்தான் கணக்கிடப்படுமே தவிர மாடுகளின் வயது பொருட்டில்லை!

மாடுகளை ஓட்டும் இரண்டு பேர் மட்டும்தான் வண்டியில் உட்கார்ந்திருப்பர். இருவரில், மாட்டின் கயிற்றைப் பிடித்து ஓட்டுபவரை ‘பந்தய மாட்டுச்சாரதி’ என்று கூப்பிடுகின்றனர். பின்னால் இருப்பவர், அவருக்கு உதவியாளர். அவருக்குப் பெயர், ‘உள்ளோட்டி.’

ஒவ்வொரு மாட்டு வகைக்கும் குறைந்தது பதினைந்திலிருந்து இருபத்தைந்து வண்டிகள் வரை பந்தயத்துக்கு வருகின்றன. முதலில் மாட்டின் உரிமையாளர்கள் பெயரைச் சீட்டுகளில் எழுதிக் குலுக்கி வண்டி களை ஒன்றன் பின் ஒன்றாக நிற்க வைக்கிறார்கள். பின்னர் பந்தயம்!

ஒரே நேரத்தில் பல வண்டிகள் சீறிப் பாயும்போது புழுதி பறக்கிறது. விடலைகளின் விசில் விண்ணை நிறைக்கிறது!

ரேக்ளா ரேஸின் விதிமுறைகள் சற்று விநோதமாக இருக்கின்றன. வண்டிகள் எந்தப் பக்கத்திலும் சென்று முன் செல்லும் வண்டிகளை முந்துகின்றன. பாதி தூரம் கடந்ததும் கயிற்றினால் ஆன கொடியை ஓட்டுபவரின் கழுத்தில் மாட்டி விடுகின்றனர். கொடி வாங்கும் இடத்துக்கு 200 மீற்றர் முன்பே பச்சைக்கொடி காட்டுகிறார்கள். கொடி வாங்கித் திரும்ப வசதியாக இடப்பக்க ஓரமாக எல்லா வண்டிகளையும் வரிசைப்படுத்தி இடமிருந்து வலமாகக் கொடியை வாங்கிச் சுற்றி, திரும்பி வர வேண்டும். பச்சைக்கொடி காட்டிய பிறகு முன் செல்லும் வண்டியை விலகினால் அப்படி விலகிய வண்டிக்குப் பரிசு கிடையாது!

திரும்பவும் புறப்பட்ட இடத்துக்கே வரும் முதல் மூன்று வண்டி களுக்குத்தான் பரிசு! ஒரே நேரத்தில் மூன்று வண்டிகள் முதலில் வந்தால் நடுவில் வரும் வண்டிக்கு முதல் பரிசு. இரண்டு வண்டிகள் வந்தால் வலது புறம் வரும் வண்டிக்கு முதல் பரிசு. இன்னொரு விஷயம், பரிசு விஷயத்தில் ஓட்டுபவரைவிட மாடுகளுக்குத்தான் முன்னுரிமை தருகிறார்கள். ரொக்கப் பணம், தங்கக்காசு, வெள்ளிக் காப்பு தொலைக்காட்சிப் பெட்டி, நெற்றிப் போர்வை, பட்டு வேஷ்டி, துண்டு போன்றவை வெற்றி பெற்ற மாடுகளுக்குப் பரிசாக வழங்கப்படுகின்றன.

தங்கமோதிரம், பொன்னாடை, ஆட்டுக் கடா, கிடை மாட்டுக்கன்று போன்றவை ஓட்டுநர்களுக்கான பரிசு.

கால்பந்தாட்டத்துக்கு மெஸ்ஸி, ரொனால்டோ, நெய்மார் போல் ரேக்ளா ரேஸிலும் சில வீரர்கள் தொடர்ந்து சாதனைகள் செய்து மதுரைப் பகுதியில் பிரபலமானவர்களாக இருக்கின்றனர். ஆட்டூர் ராமநாதன், கோட்டையூர் சிவராமன், பூலாம்பட்டி மணி, காஞ்சிப் பட்டி சுப்பன் போன்றவர்கள் தான் இன்றைய தேதி வரைக்கும் யாராலும் ஜெயிக்கப்படாத சாதனையாளர்கள்! (1965 வரையிலான கதாநாயகர்கள்)

இன்னொரு விஷயம், பந்தய மாடுகளை அவற்றின் சொந்தக் காரர்கள் விற்பனை செய்யாமல் தம் குழந்தைகளில் ஒன்றாகக் கருதி வளர்க்கின்றனர்! அவை இறந்த பிறகு சமாதி கட்டுவது, பூ இட்டு வணங்குவது, கோயிலுக்கு நேர்ந்து விடுவது போன்றவற்றையும் செய்கின்றனர்.

‘புகழும் வீரமும் மட்டும்தான் ‘ரேக்ளா ரேஸ்’ வீரர்களின் ஒரே குறிக்கோள். ஒவ்வொரு நாட்டு விளையாட்டு வீரர்களுக்கும் ஒலிம்பிக்கில் தங்கம் வாங்குவது என்பது எப்படிப்பட்ட கனவோ, அதுபோலத்தான் மேலூர் ரேக்ளா

தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)



# Sardhar Udham - திரை விமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

2021இல் வெளிவந்த இந்த இந்தி மொழிப்படம் உதம் சிங் என்ற இந்திய விடுதலைப் போராளியின் வாழ்க்கையைப் பற்றியது. இப்படத்தில் சிங்கின் வாழ்க்கை அவரது 20வதாம் வயதிலிருந்து 40 வயது வரை காட்டப்படுகிறது.

ஆனால் படத்தின் கதை, வரலாறு நிகழ்ந்த ஒழுங்கில் நடைபெறாமல், சிங்கின் வாழ்க்கையின் மிக முக்கியமான சம்பவத்துடன் தொடங்கி, அதற்கு முன்னும் பின்னும் நிகழ்ந்தவற்றை மாறி மாறி காட்டுகின்றது. என்றாலும், படம் விறுவிறுப்பாகவே தொடர்கிறது.

1919ஆம் ஆண்டில் 20 வயதான உதம் சிங் துணி தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்தார். அவ் வாண்டு ஏப்பிரல் மாதத்தில் பிரித்தானிய அரசிற்கு எதிரான போராட்டங்கள் அவர் வாழும் அமிர்தசாரில் நடைபெறுகின்றன.

ஏப்பிரல் 13ஆம் திகதி அமிர்தசாரில் மக்கள் அமைதியாகக் கூடி கலவரம் இல்லாமல் போராட்டத்தை நிகழ்த்தினர். இதைத் தடுக்க வந்த பிரித்தானிய இராணுவ வீரர்கள் முன்னெச்சரிக்கை எதுவும் செய்யாமல் பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர். இப்படுகொலை நாம் இன்று ஜாலியான்வாலாபாக் படுகொலை என்று அழைக்கிறோம்.



இப்படுகொலைக்குக் காரணமானவர்களை உதம் சிங் பழிவாங்க வேண்டும் என நினைக்கிறார். அவர்களை இந்தியாவில் வைத்து அல்ல, அவர்களது நாடான இங்கிலாந்திற்குச் சென்று உலகமறியும்படி பழிவாங்க வேண்டும் என்று நினைக்கிறார். அவர் அதை எவ்வாறு செய்ய விரும்புகிறார்? அதைச் செய்வாரா? அதன்பின் விளைவுகள் என்ன? எனப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.


1900களில் நடைபெறும் இப்படம், அக் காலத்து வாழ்க்கை முறைக்கு ஏற்ப நன்றாக அமைக்கப்பட்டுள்ளது. விடுதலைப் போராளிகளைப் பற்றிப் படம் எடுக்கும் சிலர் போல பார்வையாளர்களை ஊக்குவிக்க கதாபாத்திரத்தையும் வசனங்களையும் மிகைப்படுத்தாமல் சாதாரணமாக எடுத்தபடியினால் படம் நன்றாக அமைந்து இருக்கிறது. இவ்வாறு இயற்கையாக எடுத்து நடித்தபடியில் ஜாலியன்வாலாபாக் படுகொலை போன்ற காட்சிகள் நாம் நேரில் காணுவதைப் போல அமைந்து படத்தின் தரத்தை உயர்த்துகின்றன.

இப்படத்தின் இயக்குநர் ஷூஜித் சிர்கார் (Shoojit Sircar), உதம் சிங்கைப் பற்றி படம் எடுக்க வேண்டும் என தனது படிப்பு முடித்தவுடனே நினைத்தார். ஜாலியன் வாலாபாக் படுகொலையின் கொடுமையை எல்லா மக்களும் அறிய வேண்டும் என்பதும், பெரிதளவு பேசப்படாத சிங்கின் கதையை இக்காலத்திற்கு கொண்டு வர வேண்டும் என்பதும் அவரது நோக்கமாக இருந்தன.

உதம் சிங்கை பற்றிய விபரங்கள்



அப்போது குறைவாக இருந்தன. இயக்குநரும் இளைஞர். எனவே இப் படத்தை எடுக்க அவருக்கு இருபது ஆண்டுகள் எடுத்தன. அவர் செய்த ஆராய்ச்சி படத்தில் தெளிவாகத் தெரிகிறது. எனவே இந்திய-இங்கிலாந்து வரலாற்றில் நடைபெற்ற ஒரு முக்கிய சம்பவத்தைப் பற்றி அறிய விரும்புவோர் இப்படத்தைப் பார்க்க வேண்டும்.




## குளிர்கால...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

விளையாட்டில் பங்குபற்ற எல்லா நாடுகளும் தமது விளையாட்டு வீரர்களை அனுமதித்திருந்தாலும், சீனாவில் நடைபெறும் மனித உரிமை மீறல் நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி சில நாடுகள் தமது அரசஅதிகாரிகள் ஒலிம்பிக் நிகழ்வுகளில் பங்குபற்றுவதைத் தவிர்த்துள்ளனர்.

இவ்வாறு தமது அரசஅதிகாரிகள் பெய்ஜிங் ஒலிம்பிக்கைப் பகிஸ்கரிப்பர் எனத் தெரிவித்த முதலாவது நாடு லிதுவேனியா (Lithuania) ஆகும். அதைத் தொடர்ந்து அமெரிக்காவும் தனது அரச அதிகாரிகள் பெய்ஜிங் ஒலிம்பிக்கைப் பகிஸ்கரிப்பர் எனத் தெரிவித்தது. உய்குர் (Uyghur) மக்களை சீனா மனித உரிமைகளை மதித்து நடத்தாததே அமெரிக்க அதிகாரிகள் பெய்ஜிங் ஒலிம்பிக்கைப் பகிஸ்கரிப்பதற்கான காரணம் என வெள்ளை மாளிகை அறிவித்தது. பல ஆண்டுகளாகப் பயிற்சிபெறும் விளையாட்டு வீரர்களைத் தண்டிப்பது நியாயமாக இருக்காது என்பதற்காகவே தாங்கள் ஒரு முற்று முழுதான பகிஸ்கரிப்பைச் செய்யவில்லை எனவும் வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவின் அறிவிப்பைத் தொடர்ந்து அவுஸ்ரேலியா, ஐக்கிய இராச்சியம் (UK), கனடா, கொசோவோ, பெல்ஜியம், டென்மார்க், எட்டோனியா மற்றும் தைவான் ஆகிய நாடுகளும் தமது நாட்டு அதிகாரிகளும் பெய்ஜிங் ஒலிம்பிக்கைப் பகிஸ்கரிப்பர் எனத் தெரிவித்தன.

ஒஸ்றிரியா (Austria ), சுவீடன், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து மற்றும் இந்தியா ஆகிய நாடுகளும் தமது நாட்டு அதிகரிகளை பெய்ஜிங் ஒலிம்பிக்கில் கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவல் காரணமாகக் கலந்துகொள்ள அனுமதிக்க வில்லை எனத் தெரிவித்துள்ளன. இந்த நாடுகள் தாங்கள் பெய்ஜிங் ஒலிம்பிக்கைப் பகிஸ்கரிக்கவில்லை எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன.



விளையாட்டுப்புள்ளிவிபர ஆய்வுகளை நடத்தும் ஓர் அமெரிக்க நிறுவனமான கிரேஸ்நோட் (Gracenote) கனடிய அணி பெய்ஜிங் ஒலிம்பிக்கில் 6 தங்கப் பதக்கங்களையும், 6 வெள்ளிப் பதக்கங்களையும், 10 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று மொத்தமாக 22 பதக்கங்களைப் பெறும் எனக் கணித்துள்ளது.

2018இல் தென் கொரியாவில் உள்ள பியோங்சாங்கில் (Pyeongchang) நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக்கில் கனடிய அணி 11 தங்கம், 8 வெள்ளி மற்றும் 10 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று மொத்தமாக 29 பதக்கங்களை எடுத்து மொத்தப் பதக்கம் பெற்றவர்களில் மூன்றாவது இடத்தை அடைந்தது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா 9 தங்கம், 8 வெள்ளி, மற்றும் 6 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று மொத்தமாக 23 பதக்கங்களுடன் நான்காம் இடத்திற்கு வந்திருந்தது.

# தொலைநுட்பத்தின் தொல்லைகள்

வானளாவிய தொலைநுட்பம் வாழ்வின்
வளர்ச்சிப் பணிக்கு உதவுமென்று இருக்க
வந்ததென்னவோ தொல்லைகளே அது
தந்ததென்னவோ துக்கமும் துயரமுமே



கணித பொத்தான் முதலில் வந்தது
கணக்காளர்கள் வாழ்விழந்து போயினர்
கணித மரபு கைநழுவிப் போயிற்று
காகிதமும் கடிதமும் இல்லாமல் ஆனது

காலச்சக்கர சுழற்சி இருந்தும்
கடிகாரங்கள் காணாமல் போயின
நாட்காட்டிகள் மறைந்து போவதற்கு
நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றன

கணினி, மடிக்கணினி அடுத்து வந்தன
கலாச்சார சீர்கேடுகளும் கூடவே வந்தன
வலைத்தளங்கள் முகநூல்களும் வந்தன
வரம்புமீறி பழைய பண்பாடு சீர்குலைந்தது

கைப்பேசியும் வந்தது மனிதரை
கையாலாகாதவராய் மாற்றி விட்டது
கைப்பேசிகளை கைகளில் ஏந்தி அவர்கள்
காட்சிப் பொருளாய் நடமாடுகின்றனர்

உறவுகள் வீடுதேடி வந்த போதும்
உரையாடல்கள் இல்லாமல் போனது
உலகமே எம்கைக்குள் என்றனர் ஆனால்
உணர்வுகள் அற்று வாழத் தொடங்கினர்

மனதாரப் பேசி மகிழ்ந்த நிலமை மாறி
மௌனமாய் குறும் செய்திகள் வந்தன
அதுவும் கை காலென படங்களாய் மாறி
அந்தக் கற்பனையில் பேச்சுகள் குறைந்தன

மூளை முற்றிலுமாய் மழுங்கிப் போனது
முழுவேக உழைப்பும் சுணங்கிப் போனது
முன்னேற்றம் என்ற முகமூடி அணிந்து
மூலைகளில் சிறார்கள் முடங்கிப் போயினர்

உணவு பழக்கங்கள் மாறிப் போயின
உடற்பயிற்சிகளே இல்லாமல் போனது
மன உளைச்சலில் இளைய சமுதாயம்
மரணத்தை நோக்கிய அவர்கள் பயணம்

ஏமாற்றும் குற்றங்களும் பெருகின
ஏமாறும் மக்களும் பெருகினர்
ஆக்கப்பூர்வமான அறிவும் ஆற்றலும்
அழிவுப் பாதையில் ஒளிந்து கொண்டன

இயற்கையின் நியதிகள் மாற்றப்பட்டு
இயந்திரகதியாய் ஆன இன்றைய வாழ்வில்
இனி உலகம் எப்படி சுழலப் போகிறது
இனி அதன் விதி எப்படி அமையப் போகிறது

கவின்முகில் மு முகமது
யூசுப் உடன்குடி


# யோக சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் | சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் | பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


வாழ்வில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு மனிதரும் ஏதேனும் ஒரு பாடத்தை கற்பித்துவிட்டே செல்கின்றனர். எப்படி வாழ வேண்டும் என்பதற்கு உதாரணமாய் சிலரும் எப்படி வாழக் கூடாது என்பதற்கு உதாரணமாய் பலரும்...




## கோவிட்-19 தடுப்பூசிகள் பற்றிய கேள்விகள் உள்ளதா?

211 ஃபோன் லைன் ஆங்கிலம், பிரஞ்சு மற்றும் 200க்கும் மேற்பட்ட பிற மொழிகளில் உங்களுக்குத் தேவையான தகவல் அல்லது உங்களுக்கு உதவக்கூடிய ஆதாரங்களைக் கண்டறிய உதவும்.

இந்த சேவை இலவசம் மற்றும் ரகசியமானது.

211 ஐ அழைக்கவும்.

211®

Votre gouvernement | Québec



Another Project by
KINGDOM
at Lawrence & Victoria Park, Toronto
Special Exclusive Promotion
LAWRENCE HILL
LUXURY URBAN TOWNS
* Luxury Towns
* Stack Town Houses
* Underground Parking
* Deposit : 10% in year 2022
* Rest will be in 2023 & 2024
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
Tel: 416-321-6969
* Independently owned and operated.

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELSON**
1 Room bsmt apt. for rent. 1 kitchen & living room. washroom, laundry, parking. Avail. From March 1st 2022.
தொடர்புகளுக்கு : **647.989.0463**

**FINCH & NEILSON**
2 bedrooms bsmt for rent. Sep. entrance 1 Parking, Laundry, Kitchen, Washroom. Avail. March 01, 2022 .
தொடர்புகளுக்கு : **647-710-1971**

**MIDLAND & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. No Parking, laundry. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **416.835.2003**

**CROW TAIL & NEILSON**
3 bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, sep. laundry. Walking distance bus stop & all facilities. Avail. Feb. 15, 2022.
**437.771.9760, 647.571.7992**

**BRIMLEY & EGLINTON AVE E**
1 BEDROOM BASEMENT APARTMENT FOR RENT . Rent $800.
**PLEASE CALL NATHAN, 416-454-4466 OR 416-900-5300**

**MCCOWAN & BRIMORTON**
2 bedroom bsmt Apt for rent. Sep. entrance. Small family or working/female Student/ Small family preferred.
தொடர்புகளுக்கு : **647.717.9598**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry.Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.855.6482**

**MCCOWAN & DENISON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, internet. Female only.Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.908.1250**

**Markham and Lawrence**
3 bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Small family/singles preferred. Avail. March 01, 2022.
தொடர்புகளுக்கு : **647.740.3805**

**PORT UNION & LAWSON**
2 Bedrooms bsmt Apartment for rent. Sep. entrance, 1 parking, laundry. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **416.831.4725**

**KENNEDY & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities. Avail. March 01, 2022.
தொடர்புகளுக்கு : **416.826.3870**

**STAINES & STEELES**
2 Bedroom BSMT for rent. Sep. entrance, 1 parking, Sep. laundry. Close to TTC, Shopping, Schools, & more. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **647-450-5248**

மேலும் பக்கங்கள் 14,15,16

32 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
2-bedroom bsmt for rent. Sep.entrance, 1 parking. laundry. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.722.5519**

**STEELES & STAINES RD**
2 Bedroom, 1 washrooms, Sep. laundry, sep. entrance with 2 parking lot spot. No smoking & No pets (expecting Srilankan )
தொடர்புகளுக்கு : **416.388.2794**

**SCARBOROUGH**
2 bedroom basement for rent. Sep.entrance, parking, laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.836.5482**

**MORNINGSIDE & SHEPPARD**
Two bedrooms basement for rent. 3 car parking. Sep. entrance. Avail. immediately.
**For more info: 416.201.1222**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. kitchen, dining room, laundry, car parking. Avail. immediately.
**416-276-4664 / 647-972-9754**

**BOXGROVE & 14TH AVENUE**
2 Bedroom walkout bsmt for rent. 1 washroom, sep. laundry, 1 parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **437.999.4563**

**MORNINGSIDE & MCNICOLL**
2-bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Couple / Small family preferred.
**Contact: 416-258.3256**

**MORNINGSIDE & SHEPPARD**
2 bedroom brand new bsmt for rent. Sep. entrance.
**Contact: 416-509.5750**

**MORNINGSIDE & STAINES**
1 bedroom newly renovated new bsmt for rent. Sep. entrance, Sep. laundry, 1 parking. No pets. 30% utilities. Avail. immediately.
**Contact: 416-414.5520**

**MIDLAND & FINCH**
2 bedroom walk out basement for rent. 1 parking. $1500 for 2 people.
**Contact: 647.470.9968.**

**9TH LINE & 14TH AVENUE**
2 bedrooms & 2 full washrooms Newly built bsmt for rent. Good location. Close to schools & highways.
**416.918.9848 / 416.857.7603**

## BASEMENT FOR RENT

**STAINES & STEELES**
2 bedroom bsmt for rent. 1 parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**Contact: 647.889.3217**

**MCLEVIN & SEWELLS.**
1 bedroom bsmt for rent. Sep.entrance, 1 full washroom, laundry, 1 parking.
தொடர்புகளுக்கு: **416.809.2280**

**MIDDLEFIELD & MARKHAM**
2 Bedroom 1 bathroom basement apartment for rent. Newly renovated kitchen & bathroom. Sep. entrance 1 car parking
தொடர்புகளுக்கு : **416.786.7443**

**Eglinton / Midland**
3 Bed + 1 Washroom bsmt for rent. Sep. Entrance, Sep. Laundry , 2 Parking. Close to bus & Kenedy subway. No pets, No smoking
**Please Call 416.274.6452**

**MARKHAM RD & DENISON**
1 bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Avail. immediately.
**Haran : 416-880-4829**

## ROOM FOR RENT

**HWY 48 Main street & Millard (Stoffville)**
1 Rooms with attached washroom for rent in a house. only for ladies of students Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.222.1074**

**MORNINGSIDE & STAINES**
Room for rent in a bsmt. Sep. entrance, laundry, & kitchen. No parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416 -894-5904**

**ROSSLAND AND CHURCH ( AJAX )**
2 bed room Bsmt for rent. 1 kitchen 1 bathroom, 2 parking, laundry. avail. Only for family & student girls only.
தொடர்புகளுக்கு : **647.716.2706**

**MCCOWAN & DENISON**
1 room for rent in main floor. laundry Close to all facilities. Female preferred. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **647-678-2599**

**MIDDLEFIELD & FINCH**
Room For rent in a condo( 4th floor) . Available for couple. Rent $1000. Sep. washroom, shared Kitchen.
**Contact: 647.835.5244**

## ROOM FOR RENT

**MARKHAM & 16TH AVE.**
Room for rent. Parking, laundry.Bsmt also available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647-444-4712**

**MORNINGSIDE & SEWELLS**
4 அறைகள் கொண்ட வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Washroom, kitchen must be shared. Female preferred.
தொடர்புகளுக்கு: **416.805.8791**

**9TH LINE & 14TH AVE**
ROOM for rent in bsmt for rent. Close to YRT. Avail. immediately.
**(416) 648-1987 or (416) 669-3549**

**FINCH & PHARMACHY**
1 Room for rent in main floor. Laundry. Close to all facilities.Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.838.6636**

**BRIMLEY & EGLINTON**
2 Room for rent. Laundry. No smoke. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.294.0193**

**NEILSON & ELLESEMERE**
Sharing one bedroom for rent an apartment . Ladies only. Rent $800. Everything included.
தொடர்புகளுக்கு : **647-913.7656**

**BELLAMY NORTH.**
One BED ROOM Room For Rent. Close to all facilities. Avail. From February 01, 2022 .
**Please contact :437.833.4878 ASAP.**

**BRIMLEY & EGLINTON**
Bedroom for rent in a bsmt. Sep. entrance.Working Female or student preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.238.9061**

**WARDEN & ELLESMERE**
1 large bedroom for rent in 2 bedroom Bsmt. Parking, internet. sharing kitchen & washroom
தொடர்புகளுக்கு : **416.294.4631**

**NEILSON & MCLEVIN**
One room for rent in a basement. Laundry. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **(647)766-7779**

**PHARMACY & FINCH**
One room for rent upstairs Separate washroom. Unlimited internet. Close everything.
**For more info call : 416.201.1222**

**DANFORTH & MAGNOLIA**
Rooms for rent in a bsmt. couple/single/small family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.529.7320**

**MARKHAM & EGLINTON**
1 Bedroom Rent. Shared kitchen and washroom. Students or working professional preferred. Avail. immediately.
**Contact: 416-473-8729**

## APARTMENT FOR RENT

**KENNEDY & EGLINTON**
1 Bedroom apartment for rent.
Close to all facilities.
**Contact: 647. 763.2760**

## HOUSE FOR RENT

**MIDDLEFIELD & FINCH (SCAR.)**
3 bedroom +2 Bedroom full (including basement) house for rent.
4 parking, laundry.
தொடர்புகளுக்கு: **647.720.9266**

**WARDEN & LAWRENCE**
3 bedroom bangalow ( main flour ) house for rent. Ladies or Students preferred. No pets, Avail. from February. 15, 2022.
தொடர்புகளுக்கு: **(647) 631-0481**

**MARKHAM & DENISON**
3 bedroom with 3 washroom house for rent. 4 parking. Avail. immediately.
**647.282.0643 / 647.938.9492**

**MARKHAM / SHEPPARD**
3 Bedroom main flr,1 Bedroom basement, sep. entrnce, laundry & parking.
Avail February 01, 2022.
தொடர்புகளுக்கு: **289.624.6626**

**MARKHAM / BRIMORTON**
3 bedroom bungalow house for rent.
1 bedroom bsmt apartment with sep.entrance with car parks.
Avail. immediately .
**416.726.6076 / 416.299.7876**

**BIRCHMOUNT & FINCH**
2-storey townhouse. 3 + 1 bedrooms and 2 + 1 bathrooms. Single garage and 2 exterior parking. Available immediately.
**Contact: 647-289-3436**

**MIDLAND & EGLINTON**
3 Bedrooms & 2 Bathrooms house for rent. 2 parking, Sep. laundry. Close to Kennedy subway. Avail. immediately.
**Contact: 647-296.7932**

**SHEPPARD & ROUGE RIVER**
Furnished 2 Bedroom townhouse for rent. Sep. entrance, parking. Laundry.Close to all amenities. Avail. Immediately.
**Contact- Uthaya: 416.508.3807**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom basesment for rent. Sep. entrance, laundry, parking, cable & free Wi-Fi. Close to TTC, catholic & public elementary schools & other all facilities.
No pet, No smoke & No drink.
Available immediately.
**Contact: 647-721-2637**

## BASEMENT FOR LEASE

**WESTNEY & ROSSLAND (AJAX)**
2 bedroom walkout bsmt for lease. washroom, Sep. entrance.
1 parking, sep. laundry.
**Rupan: 647.400.1137**

## BASEMENT /ROOM FOR RENT

**DANFORTH & EGLINGTON**
2 beadroom bsmt or rent. Sep. enratnce. 2 Rooms also avail for Rent.WiFi, Laundry, 24 hours bus service,Walking distance to Grocery stores, Pharmacy, Banks etc.Closer to Kennedy Subway, Scarborough Center, Bellemy Go station.
**Contact : 647.869.9733**

## BASEMENT LEASE

**MARKHAM RD & DENISON ST**
Brand New Bsmt With Separate Entrance & Large Windows. 2 Bedrooms + 1 Bathroom, Ensuite Laundry & 1 Parking Space.
Avail. Immediately.
**Contact: 647-985-6659**

## BASEMENT FOR RENT

**TAUNTON/WHITES ROAD.**
Basement apartment
2 Bedroom, 3pc washroom,kitchen, sep. laundry room Sep. entrance
Per month $1,550 +50% bill
தொடர்புகளுக்கு: **416) 268-5296**

## BASEMENT FOR RENT

**Morningside & Finch**
1 bedroom walkout basement for rent Parking , Laundry. Close to all facilities.
Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416-832-6457**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
வாடகைக்கு உள்ளது.
அழையுங்கள்- **647.861.8240**

**வாடகைக்கு கொடுத்திட,பெற்றிட**

Rooms: 5 BR, 4 BR, 3 BR, 2 BR, 1 BR APT, House, Condo, Basement GTA, TORONTO, Scarborough, york, Peel, Durham, Halton ஆகிய பகுதிகளில்
**A1 Canada Rental Services**
**MR Ratha Francis Xavier**
**416.857.5252 / 416.752.4444**

**வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட**

வாடகைக்கு வீடுகள், Condo, Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

மேலும் பக்கங்கள் 13,15,16

## BASEMENT FOR RENT

**MIDDILFIELD & FINCH**
Basement for rent. Sep. entrance. Men preferred. Close to TTC & all other facilities.
Available January 15, 2022.
**Contact: 647.707.6095**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & FINCH**
2 bedroom basement for rent. Sep. entrance. 1 parking, laundry.The buses runs across to the house (939, 953 & 133)
**Contact : (416) 669-9254**

## BASEMENT FOR RENT

**MARKHAM & BRIMORTON**
2 Room bsmt for rent. Sep.entrance, Parking, laundry. Close to all facilities. Small family only Avail. immediately.
**416.575.6226 / 647.341.1657**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. 1 Parking. Couple, Students or single preferred.
No smoke or pets.Close to all facilities.
Avail. immediately.
**Contact : 905.472.8528**

**உடனடி வாடகைக்கு, விற்பனைக்கு**

வீடுகள், கொண்டோக்கள் விற்க, வாங்க, வாடகைக்கு விட, வாடகைக்கு பெற்றுக்கொள்ள அழையுங்கள்
**Jey 416-816-9011**

## ROOM FOR RENT

**KENNEDY & EGLINTON**
1 Room for rent in a 2 bedroom aprt. 1 person $1,000, 2 person $1,500. Working Students, 65+seniors preferred. Close to TTC, Kennedy subway. No pets, smoking, drinking. Avail. immediately
**416.857.5252 / 416.752.4444**

## HOUSE FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**
3 Bedroom house for rent. 3 washroom, parking, laundry. Avail. February 01, 2022.
தொடர்புகளுக்கு:
**647.296.7932**

## HOUSE FOR RENT

**BRIMLEY & EGLINTON**
3 Bedroom, 2 washroom house for rent. Parking, Sep. laundry. Close to school, hospital & Shoping Plazas. Avail. Immediately.
**Contact: 647.981.1997**

## HOUSE FOR RENT

**WESTNEY & HARWOOD - SOUTH AJAX**
3 Bedrooms banglow house for rent. 1 Bathrooms. 2 parking, shered laundry. Near hospital, Hwy 401. Go staition. Close to all amenities.
Avail. March 2022.
**647.608.6097 / 647.916.5990**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom basement for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent
3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & ELLESMERE:** 3 bedroom, 2 full washroom brand new basemet for rent. Rent $2,000 + utilities.

**MARKHAM & SHEPPARD:** 3 bedroom+ 2 washroom bsmt forrent. Rent $1,800 + 50% utilities. No alcohol, No pets,No smoking.

**DONMILLS & STEELES:** 2 bedroom+ 1 washroom bsmt forrent. sep. laundry. Rent $1,400 + 40% utilities. No alcohol, No pets, No smoking.

**647.507.2148 / 647.864.1051**

## HOUSE FOR RENT/ROOM FOR RENT

**KENNEDY ROAD, SCARBOROUGH - EGLINTON**
THREE BED ROOMS & LIVING ROOM. KITCHEN+DINING+FRIDGE+ ALL FACILITIES. 2 washroom-NEAT & CLEAN. CAR PARKING AVAILABLE.
**ALSO SINGLE SEPERATE ROOM AVAILABLE FOR STUDENT.**
**Please call : 647.719.5853 / 416.285.4695**

## HOUSE / BASEMENT FOR RENT

**MCCOWAN & ALTON TOWER**

4 bedrooms, 2 1/2 washrooms Detached two story house for rent.
2 parking.Available as of immediately.

**STAINES & STEELES**

1 bedroom Basement for rent with separate entrance. Available immediately.

தொடர்புகளுக்கு: **416.836.0010**

## வாடகைக்கு

தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட
**GTA Square Mall (Middlefield & Finch)**
நிலமட்ட வியாபார இடம் **February 01** முதல்வாடகைக்கு வருகிறது. மாத வாடகை **$ 1600.00.**

**Krishna (Shiyara) 647.308.6069**

## முகாமையாளர் தேவை

மிசிசாகா இந்து ஆலயத்திற்குப் பகுதி நேர, முழு நேர முகாமையாளர் தேவை. தகைமை ஆங்கில அறிவும் கணினி அறிவும் ஓரளவு தெரிந்திருக்க வேண்டும். தமிழ், சமயம் பற்றித் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். முகாமையாளருக்கான பயிற்சிகள் வழங்கப்படும். தங்குமிட வசதி தேவைப்படின் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647-782-8060 / 416-455-8836**

## எங்கள் சேவைகள் /OUR SERVICE

**1. Taxe Preparation** **2. Insurance** **3.Form Filling**
**4. Resume Preparation** (வேலைபெற்றுக்கொள்ள உதவி
**5. Benefits ( EI, WSIB & ETC )** (அரசாங்க உதவி பெற்றுக்கொள்ள உதவி வழிகாட்டல்) மேலும் பல சேவைகள் வழங்கப்படும்.

**Call & WhatsApp : 437.256.2052**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**BARRIE**இல் உள்ள **Restaurant**இல் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை.

**Full time / Part time - 20$ per hour**

**Contact for other details :- 647.969.2324**

## AZ/DZ DRIVERS WANTED

Experienced drivers wanted immediately
(At least one year) for long & short run with in Canada.
Full time. on call. SPS Transporation Private LTD.

**647.528.2224 / 647.830.4644**

## BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC.**

**(SCARBOROUGH)**

உங்கள் பயணத் தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.

Please call or text me : **416.451.0055**

**info@rainbowcharterservice.ca**

## பராமரிப்பாளர் தேவை

வயதான பெண்மணியைப் பராமரிக்க பராமரிப்பாளர் தேவை. சமையல் வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

**647.667.0482 / 647.325.9186**

## பராமரிப்பாளர் தேவை

69 வயதுப் பெண்மணி ஒருவரைப் பராமரிக்கப் பெண் ஒருவர் தேவை.
Need a female to take care of 69 yr. old women assist with caretaking, cooking & cleaning.

**Location near VICTORIA PARK & HWY 401**

தொடர்புகளுக்கு: **647.618.1657**

## பராமரிப்பாளர் தேவை

வீட்டுக்கு வந்து வயதான பெண் மணியைப் பராமரிக்கப் பெண் ஒருவர் தேவை.
இடம் : **Port Union & Sheppard area**
சம்பளம் : பேசித் தீர்மானிக்கலாம்.
விருப்பம் உள்ளவர்கள்
**905 - 472 - 1199** க்குத் தொடர்பு கொள்ளவும்.

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820 / 647.868.2440**

## AUTO MOBILE GARAGE FOR RENT

**MACCOWAN & SHEPPARD**

வாகனம் திருத்துமிடம் வாடகைக்கு உண்டு. Auto mobile garage for rent. complete or half or shere. Busy location in **Scarborough**

தொடர்புகளுக்கு : **416.880.1404**

## USED CARS WANTED

USED TOYOTA CARS,
VANS WANTED.
ANY CONDITION.

**Call: 437.688.6305**

## OFFICE SPACE FOR RENT

**MIDLAND & FINCH**

(4168 FINCH AVE E )
AVAIL. IMMEDIATELY

**416-894-3333**

## CLEANERS WANTED

Woodbridge Area
Daytime and after hours.

**Please contact :**

**416-412-3223**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள்,
**Electronics** பொருட்கள்
வீசுவதற்காக வைத்திருந்தால்
இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

**Contact :** பிறேம்-**647.835.5244**

## பேர்ட் சில்வர் காடின் முதியோர் இல்லம்

**24 மணி நேர முதியோர் பராமரிப்பு சேவை**



பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களால் 24 மணி நேரமும் ஆதரவாகவும் சௌகரியமாகவும், மகிழ்ச்சியாகவும் கழித்திட நாடவேண்டிய ஒரே இடம்

**416.613.1840 / 647.272.6993**

birdsilvergardens@gmail.com

MAIN INTERSECTION:-( Port Union & Island Road)

யாராவது உன்னை ஒதுக்கி வைத்தால் கவலை ஏன்?
யார் உன்னை எந்த தூரத்தில் வைக்கிறார்களோ
அந்தத் தூரத்தில் வாழக் கற்றுக்கொள்!
அதனால் ஒரு நஷ்டமுமில்லை!
உன்னோடு நான்தான் இருக்கிறேனே? அது போதாதா?
தர்மத்தின் வாழ்வுதனை சூதுகவ்வும் இறுதியில் தர்மமே வெல்லும்! - பகவான் ஸ்ரீகிருஷ்ணர்



Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

# வீடு வாடகைக்கு!! FOR RENT!!

**Available for Rent**
**Vaughan – Rutherford/Bathurst – Townhouse**
(3Brm + 3Bath) **[$3600/m]**
**Markham – Markham/Denison – Semi Detached Bsmt**
(2Brm + 2Bath, Sep.Ent) **[$1700/m]**
**Scaroborugh – Warden/Kingston-Detached**
(2+1 Brm +2Bath) **[$3000/m]**
**Scaroborugh – Morningside/Morningview- Bsmt**
(3Brm +2Bath) **[$1900+Utilities/m]**
**Scaroborugh – Vicotria Park/Hwy401- Detached**
(3Brm +1Bath) **[$2750/m]**
**Scaroborugh – Warden/St.Clair- Semi Detached**
(3Brm +1Bath) **[$2500/m]**
**Brampton – Chinguacousy Rd/Mayfield Rd- Detached House**
(4Brm +3Bath) **[$2900/m]**

**Available for Rent**
**Downtown Condo – Bay St/Adelaide St W– Condo**
(2Brm + 2Bath) **[$1990/m]**
**Pickering – Pickering Parkway/Valley Farm- Townhouse**
(3Brm + 2Bath) **[$2750/m]**
**Oshawa – Adelaide/Waverly- Detached Bsmt**
(3Brm + Bath, Walkout) **[$1800/m]**
**Oshawa – Simcoe/Conlin- Detached**
(4+2Brm + 4Bath) **[$2900/m]**
**Ajax – Rossland/Church St- Semi Detached**
(4Brm + 3Bath) **[$2800/m]**
**Bowmanville/East Shore/Port Darlington- Detached Floor**
(4Brm + 3Bath) **[$3500/m]**
**Beaverton – Simco St/Mara Rd- Detached House**
(4Brm + 4Bath) **[$2690/m]**

## BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் எப்படி தேர்ந்தெடுத்துக் கொடுப்பது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management** துறையில் எனது 32 வருட அனுபவம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

**கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

**We are managing Condos, Houses, Apartments in the area of Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.**



# Linghan Thampu

# AUTO & HOME

## INSURANCE COMPANIES

- CAA Insurance
- Royal and Sun Alliance
- Pembridge Insurance
- SGI Canada
- Economical Insurance
- Intact Insurance
- Echelon Insurance
- Aviva Insurance
- Coachman Insurance

CONTACT

**416-450-5261**

linghan.thampu@brokerunion.ca

www.brokerunion.ca

# சின்னச் சின்ன ஆசை




சிறு வயதில் உங்களிடம் யாராவது, உங்களுக்குப் பிடித்த விடயங்களை, உங்களை மகிழ்ச்சிப்படுத்தும் விடயங்களை சொல்லச் சொன்னால் என்ன சொல்லி இருப்பீர்கள். ஒரு கார்காலத்து மண் வாசனை, ஒரு மெல்லிய தூறல், எங்கோ தென்றலில் இசைந்து வரும் பாடல், வண்ணத்துப்பூச்சி, அன்றலர்ந்த மலர், பௌர்ணமி நிலவு, குழந்தையின் சிரிப்பு, அலைகளின் ஆரவாரம்... இப்படி நீண்டிருக்கும் உங்கள் பட்டியல்.

எத்தனை வயதானாலும், வாழ்க்கை எத்தனை அனுபவங்களை தந்திருந்தாலும், மனதின் ஏதோ ஒரு மூலையில் உயிர்ப் போடு வீற்றிருக்கும் உங்கள் இள வயது நினைவுகளை சற்றே மீட்டிப் பாருங்கள். உங்கள் சின்னச்சின்ன ஆசைகள் அது தந்த நிறைவு உங்களுக்குள் இப்போதும் மகிழ்ச்சியாய் ஓர் அழகிய சித்திரம் வரையும்.

நீங்கள் ரசித்து, இலயித்து, அன்று உங்களுக்குப் பிடித்த விடயங்களை சொல்லும்போதே உங்கள் மனம் எத்தனை சந்தோஷித்தது, உங்கள் முகம் எப்படி மலர்ந்தது என்று நினைத்துப் பாருங்கள். இயற்கை இப்படி எப்போதும் உங்களுக் கான மகிழ்ச்சியை இலவசமாகத்தான் உங்களுக்கு அள்ளித் தருகிறது. ஆனால் இன்றைய அவசர உலகில் இதையெல்லாம் சந்தோஷம் என்று நினைப்பதே குழந்தைத் தனம், அறியாமை என்று நினைக்கிறீர்கள். அதனால் உங்கள் மெல்லிய உணர்வுகளை கடினமாக உங்களுக்குள் இருத்தி அழுந்திப் போகிறீர்கள். அதையே உங்கள் வளர்ச்சியாக நினைத்துக்கொண்டு உங்க ளுக்குள் நீங்களே சுருங்கிப் போகிறீர்கள்.

இங்கு மகிழ்ச்சி என்பது விரும்பிய கல்வித் துறையில் சேர்வதும், விரும்பிய பட்டம் வாங்குவதிலும், விரும்பிய நாட்டில் வாழ்வ திலும், விரும்பிய நிறுவனத்தில், விரும்பிய வேலை கிடைப்பதிலும் விரும்பிய பொருளை அடைவதில் மட்டுமாக ஒரு மாயமான் வேட்டையில் உங்கள் வாழ்க்கை கை நழுவிப் போய்க் கொண்டிருக்கிறது.

மகிழ்ச்சி என்பது செல்வச் செழிப்பில்தான் இருக்கிறது என்று 80சதவீத மக்களும், பேரும் புகழிலும்தான் இருக்கிறது என 50 சதவீதம் மக்களும் அதன் பின்னே ஓடுகின்றனர் என்கிறது சமீபத்தில் உலகளாவில் நடந்த ஆய்வு ஒன்று.

இக்கல்லூரியில் இந்தக் கல்வித்துறையில் சேர்ந்து விட்டால், இந்த நிறுவனத்தில் இந்த வேலையில் சேர்ந்து விட்டால், இந்த இடத்தில் இந்த வகையில் வீடு வாங்கி விட்டால், அதுவே மகிழ்ச்சி என்பதாக ஏதோ ஒன்றை மகிழ்ச்சியின் இலக்காக வைத்து, அதை நோக்கிய பயணத்தில் இலக்கற்று அலைகிறது மனம்.

அந்த என்றோ ஒரு நாளுக்காக மூச்சைப் பிடித்துக் கொண்டு மகிழ்ச்சியை தள்ளிப் போடும் மனம் அது கிடைக்காமல் போகும் போது, நினைத்தது நினைத்த நேரத்தில் நினைத்த மாதிரி நடக்காமல் போகும்போது, மனம் உடைந்து போவது





தான் இங்கே கவனிக்க வேண்டிய விடயம்.

ஏதாவது ஒரு பிரச்சினை என்றாலும், அது தீரும்வரை, உங்களுக்குப் பிடித்த விடயங் கள் மற்றும் பொழுது போக்கு, சந்தோஷம் என்பவையே ஒதுக்கிவைக்கப்பட்ட அல்லது ஒரு தவிர்க்கப்பட வேண்டிய விடயமாக நினைக்கிறீர்கள். அவமானமோ, தோல்வி யோ, வியாபாரத்தில் நஷ்டமோ அவ்வளவு தான் காற்றுக்கூடப் புக முடியாதபடி சந்தோஷக் கதவுகளை சாத்தி வைத்து மிரள்கிறீர்கள்.
அந்த பிரச்சினை நீங்கும்வரை, அது சரி யாகும்வரை, அப்பிரச்சினையை விட்டும் உங்கள் கவனம் சிதறி விடுமோ எனப் பதறுகிறீர்கள். அந்த இடைப்பட்ட கால நேரத்தில் இயல்பாக சிரிப்பதையோ, சந்தோசமாக இருப்பதையோ, குற்றமாக நினைக்கிறீர்கள். இவ்வளவு பிரச்சினைக் கிடையே, சந்தோஷசமா, மகிழ்ச்சியா, இரசனையா என்று உங்கள் மனதே உங்களை கேட்க அனுமதிக்கிறீர்கள். பிரச்சினையை விட்டும் உங்கள் கவனம் சிதறி விடாமல் அதன் தீவிரத்தை ஒவ்வொரு நொடியும் உணர்ந்து கொண்டி ருந்தால்தான் உங்களால் உஷாராக இருக்க முடியும் என்று நம்புகிறீர்கள்.

பிரச்சினைகளையே மீண்டும் மீண்டும் அசைபோட்டுக் கொண்டு மனம் ஆற வில்லையே என உங்கள் மனமே உங்களிடம் அங்கலாய்க்கிறது. பிரச்சினை கள் சூடான பானம் இல்லை அதை உற்று உற்று பார்த்து ஊதி ஊதி ஆற்றுவதற்கு. அது ஊத ஊதப் பெரிதாகும் நெருப்புப் பொறி. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் உங்களுக்குப் பிடித்த விடயங்களை நீங்கள் செய்வதை விட்டும் நிறுத்தாமல் செய்து கொண்டிருக்கும்போது உங்களுக்குள் எழும் நிதானமும், தன்னம்பிக்கையுமே அந்தப் பொறியை அனைத்து உங்கள் கவலைக்கு ஒரு மருந்தாகி உங்கள் மகிழ்ச்சியை தக்க வைக்கும்.

பிரச்சினைகளையே நினைத்துக் கொண்டி ருக்கும்போது, இனி என்ன செய்ய வேண்டும் எனத் தர்க்கரீதியாக சிந்திக்கக் கூடிய உங்களது மூளையின் பகுதி வேலை செய்யாமல் நிறுத்த, உணர்ச்சிவசப்படும் போது வேலைசெய்யும் உங்களது மூளையின மற்றைய பகுதி, இப்படி செய்திருக்க வேண்டுமோ, அப்படி செய்திருக்க வேண்டுமோ என உங்கள் எண்ணங்களை அலை பாயச் செய்து பிரச்சினைகளையே மனம் மீண்டும் மீண்டும் அசை போடும்.

பொதுவாக 1+1=2 என்பது மாதிரி ஒரு பிரச்சினை நடந்தால் நான் இப்படித்தானே இருக்க வேண்டும் என ஏதோ ஒரு பழக்கத்திற்கு கட்டுப்பட்டோராக உங்கள் இயல்பை விட்டும் மாறி, மனம் கனத்து தடுமாறிப் போகிறீர்கள். உண்மையிலேயே எவ்வளவு பெரிய ஆழமான அகலமான கடலாக இருந்தாலும் ஒரு படகில் அலை களின் மேலே பயணம் செய்து கரையைக் கடந்து விடலாம். ஆனால் அந்தப் படகுக்குள் சிறு தண்ணீர் புக விட்டாலும் அவ்வளவுதான் படகே தன்னிலை இழந்து மூழ்கி விடக்கூடும்.

அதுபோல பிரச்சினையின் மேலே உங்கள் கவனம் இருக்காலாமே தவிர பிரச்சினையை உங்களுக்குள் எடுத்துக் கொண்டால் அது உங்களையே மூழ்கடித்து விடும். அதனால் எந்தப் பிரச்சினை இருந்தாலும் உங்களை சுற்றி நடக்கும் சின்னச் சின்ன சந்தோஷங் களில் கவனத்தை செலுத்தினால் அதுவே எந்தக் கவலைக்கும் ஒரு நோயெதிர்ப்பி யாகப் பிரச்சினையின் தீவிரத்திலிருந்து உங்களை தற்காக்கும்.

ஒன்றோடொன்றாகக் கோர்க்கப்படும் சிறு சிறு பூக்களே அழகிய பூமாலையாகிறது. சின்னச் சின்ன சந்தோஷங்களை நீங்கள் உணர்ந்து அனுபவிக்கும்போது அது உங்களுக்குள்ளே தருகிற புத்துணர்ச்சியும் புதுத் தெம்பும் ஒரு பெரிய சந்தோஷமாக உங்கள் மனது நிறைந்து போகும்.


சிலருக்கு அவர்கள் பிரச்சினையை மறக் கடிக்கும் அளவு வேறு ஏதாவது மிகப் பெரும் சந்தோஷமான சம்பவம் நடக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பர். ஆனால் உண்மையில் அப்படி ஒன்று நடக்கின்ற வரை உங்கள் மகிழ்ச்சியை நீங்கள் தள்ளிப்போட வேண்டியதில்லை. சின்ன சந்தோஷங்களும் நல்ல மகிழ்ச்சியாக உருவாகி எதையும் சமாளிக்கும் சக்தியைத் தரும்.

நீங்கள் நினைத்தது போல் நடந்தால் அது இயற்கையான மகிழ்ச்சியாக உங்களுக்குத் தெரிகிறது. நீங்கள் நினைத்தது போல் நடக்காமல் இருந்து நீங்கள் சந்தோசமாக இருக்க முயலும்போது, அது போலியான மகிழ்ச்சியாக (synthetic happiness) உங்களுக்குப்படுகிறது. ஆனால் நம் மூளையின் முன் மடல் (frontal lobe) இல் இருக்கும் மூளையின் வெளிப்பகுதியை மூடி இருக்கும் Prefrontal cortex, நீங்கள் செயற்கையாக செய்து பழகுவதை உங்களுக்கு இயற்கையாக இயல்பாக செய்யவைக்கும் அபார ஆற்றல் வாய்ந்தது.

விமானம் ஓட்டப் பழகுவோர்முதலில் Flight Simulatorஇல் ஓட்டிப் பார்த்துப் பழகி பின் நேரடியாக ஓட்ட ஆற்றல் தரும் இந்த cortex பகுதி, பிரச்சினைகளுக்கிடையே, போலியாக நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க முயலுவதை, ஒரு பழக்கமாக எடுத்து எந்த சூழலிலும் இயல்பாக உங்களை மகிழ்ச்சியாக இருக்கச் செய்யும். அந்தப் போலியான மகிழ்ச்சியும் நீங்கள் நினைத்தது கிடைக்கும்போது அடையும் இயற்கையான மகிழ்ச்சியைப் போலவே தரமானது, நீடிக்கக் கூடியது என்கிறது அறிவியல்.

உண்மையில் பிரச்சினையின் ஆழத்தை விட அதுதரும் வலியைவிட அதை சற்றேனும் இறக்கி வைக்க முயலாமல் உங்கள் மனதில் தூக்கிச் சுமப்பதே உங்களுக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி மகிழ்ச்சியற்றுத் தவிக்கச் செய்கிறது. உங்கள் சின்னஞ்சிறு குழந்தை அருந்தக் கூடிய சிறு குவளையில் கொஞ்சம் தண்ணீரை எடுத்துக்கொண்டு அப்படியே சற்று நேரம் சுமந்து பாருங்கள். காற்றுப் போல இலகுவாக இருந்த அந்தக் குவளை, நேரம் ஆகஆக உங்கள் கைகளுக்குள் சுளீர் என வலியை ஏற்படுத்தி, கைகள் கனத்து அசைவற்றுப் போகுமளவு பாரமாகத் தெரியும். இதுவே உங்களுக்குப் பிடித்த பாடலை பாடிக் கொண்டே பிடித்த விடயங்களை செய்து கொண்டே சுமந்து பாருங்கள். உங்களுக்கு அது இலகுவாகத் தெரியும். உண்மையில் சுமையில் இல்லை மனப்பாரம். மனப் பாரத்தில் இருக்கிறது சுமை.





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# திரு. முத்துத்தம்பி பேராயிரவர்

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் மாண்புமிகு அதிபர் திரு. முத்துத்தம்பி பேராயிரவரின் 28ஆவது ஞாபகார்த்தம்

1. மானிப்பாய் இந்துக் கல்லூரியானது திருமூலரின் இந்து சைவத் தொலை நோக்கில் கட்டப்பட்டதாகும். நான் பாடசாலையில் சேர்ந்த முதல்நாளே கூட்ட மண்டபத்தில் நடராஜர் சிலையையும் நடனத்தின் புகழ்களைப் பாடிக்கொண்டிருந்த சைவ மகான்களினதும் படத்தையும் கண்டேன். அந்தச் சந்தர்ப்பத்தில் எனது முதல் அடியே எனது இறுதி அடியாகவும் இருக்கும் என்பதை அறிந்திருக்கவில்லை. எனது உயிர் வாழ்விற்கான செய்தியை அந்த நடனம் கொண்டிருந்தது. உயிர்வாழ்வு என்பது பஞ்சகிருத்தியா என அழைக்கப் படும் கற்றல் வழிமுறையின் மூலம் அதன் இறுதி நிறைவையும் சுதந்திரத்தையும் கற்றுக்கொள்வதற்கும், வளர்வதற்கும், பரிணாம வளர்ச்சி அடைவதற்கும், முதிர்ச்சி பெறுவதற்கும் ஒரு சந்தர்ப்பமாகும்.

எனது சுறுசுறுப்பான பாடசாலை நாட்களில் தமிழ் மற்றும் இந்து மதத்திற்குப் பதிலாக ஆங்கிலத்தையும் இலத்தீனையும் கற்றேன். காலனித்துவக் கல்வி முறை நான் இந்தத் தெரிவை மேற்கொள்ளக் கட்டாயப்படுத்தி யது. அந்நியரின் ஆட்சியினால் எனக்கு என் தாய் நாட்டில் இப்படியானதொரு நெருக்கடி ஏற்படுமானால், வெளிநாடொன்றில் வாழும் ஒரு தமிழ்க் குழந்தைக்கு எவ்வளவு அதிக மாக இது காணப்படுவதுடன் உண்மையில் சாத்தியமாகும். எனது குடும்பமும் எனது கல்லூரியும் என்னைக் காப்பாற்றியது. இறுதியில் உள் நடனம் வெற்றி பெற்றது.

நம் குழந்தைகளுக்கு எமது பூர்வீகப் பாரம் பரியம் பற்றி சிறிதளவேனும் தெரியப்படுத்து வதும், துன்பகரமான அடையாள நெருக்கடி யிலிருந்தும் அதன் தீய விளைவுகளில் இருந்து அவர்களைக் காப்பாற்றுவதும் சகல பெற்றோர்களினதும் கடமையாகும். அறுபது வருடங்கள் ஆங்கிலம் கற்றும் அது என்னை ஒரு கறுப்பு ஆங்கிலேயானாக மாற்றவில்லை. நான் ஒரு தமிழ், இந்து, மார்க்சிச வாதியாக இருப்பதில் பெருமை கொள்கிறேன். (அகச் சுத்திக்கு சமயம் புறச் சுத்திக்கு மார்க்சியம். இதை நான் 1954இல் கூறினேன்)

2. MHC, OSAயில்

நான் ஒரு தலைமை ஆசிரியர் அல்லது ஆசிரியர் என்பதை மறந்து MHC, OSAயின் பழைய மாணவனாக இங்கு வந்துள்ளேன். அது கடந்த கால வரலாறு. பழைய மாணவன், எனது இதயம் எப்போதும் இளமையாகவும், ஒரு குழந்தை போலவும், ஒரு பையனாகவும் பசுமையாக இருக்கி றேன். இதற்குத்தான் மேன்முறையீடு செய்கி றேன். தீவிரமான, பன்முகத்தன்மை கொண்ட தலைக்கனம் கொண்ட தலைக்கு அல்ல. MHC என்னை உருவாக்கியது.

நாம் ஒருவரை ஒருவர் நம்பினால் நாம் வளர்ச்சியடைவோம். நாம் ஒருவரை ஒருவர் நம்பா விட்டால் நாம் சண்டையிட்டு ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்கிறோம். மற்றொரு வரில் நீங்கள் காணும் அனைத்தும் உங்கள் உள்ளேயும் இருப்பதால் நாம் நல்ல உணர்வை உணர்கிறோம். உங்களுக்கு நீங்கள் உண்மையாக இருங்கள். சட்டத் தொகுப்பிற்கல்ல. இல்லையேல் நீங்கள் வெற்றுக் கோதுபோலாவீர். உள்ளே ஆள் இல்லாததொரு மேலங்கி (Coat) போல.

எம்மால் எவ்வளவோ பெரிய விடயங்களைச் செய்யமுடியும். நாம் பணிவாகவும், விவேக மாகவும், முரண்படாதவர்களாகவும் இருப் போம். விடயங்கள் தொடர்பாக எம்மிடம் வலுவான உணர்வுகளும் எண்ணக்கருத்துக் களும் உள்ளன. ஆனால் இது MHC பற்றியது. கல்வியின் மையம் உள்ளமாக இருக்கவேண்டுமே அன்றித் தலையல்ல. தலையைவிட உள்ளம் வாழ்க்கைக்கு பதில் அளிக்கிறது. உயிர் வாழ்வு ஓடும் நதியைப் போன்றது, நிலை நாட்டப்பட்ட கொள்கையோ கோட்பாடோ அல்ல.

3. மனத்தினால் கிடைமட்ட நேரத்துடன் (Horizontal time) மட்டுமே செயற்பட முடியும். அன்பு செங்குத்து நேரத்தில் ( Vertical time) உருவாகுகிறது. எமது மனம் சிந்திக்கிறது, உணர்வதில்லை. உணர்ந்து கொண்ட மனிதன் நிகழ் காலத்தில் தன் சாரத்தில் வாழ்கிறான். நீங்கள் தலையால் வாழ்ந்தால் - எதிரிகள் வெற்றிபெறுவர். நீங்கள் உள்ளத்தால் வாழ்ந்தால் - நான் வெற்றி பெறுவேன். குருவின் அருள் தேவை. குருவின்



திரு. முத்துத்தம்பி பேராயிரவரின் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட வாழ்க்கைக் குறிப்பில் (Memo Pad) இருந்து சில குறிப்புகளின் தமிழாக்கம்.

உதவியால் உள்ளம் வலுப்பெறும், தலை பலவீனமாகும். தனியாக சாத்தியமில்லை.

என்னைப்போல் ஒரு குருவைத் தேடுங்கள். எங்களைக் காப்பாற்ற சிவன் குருவாகிறார். புத்தக அறிவின் மூலமோ தலையினாலோ அவரை அளவிட முடியாது.

இன்று மக்கள் சமயப்பற்றுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் களிமண் கட்டி யைப்போல், ஆன்மீகமற்றவர்களாக இருக் கின்றனர். உள்ளே உள்ள யதார்த்தத்தை, உள்ளே உள்ள அதிசயத்தை, இழக்கின்ற னர். நீங்கள் அந்தக் கேள்வியை விவாதிக் கலாம். ஆனால் எங்களுக்கு ஆன்மீகம் வேண்டும்.

நாம் ஒளியில் வாழ்ந்தால் வயதாகும்போது அதிக ஆற்றலுடனும், உயிரோட்டத்துடனும், அழகாகவும் இருப்பது சாத்தியமே. நாம் எமது மரணத்தைத் தேர்வு செய்யலாம்.

4. கடைசிக்கு முதல் நாள் இரவில் இதயத்தில் கை வைத்தபடி அவரது வார்த்தைகள், வாழ்வின் நடனத்தை என்னால் உணர முடிகிறது. அது ஆனந்தமாக இருக்கிறது, அது அழகாக உள்ளது.

நீங்களும் உயிர்வாழ்வின் நடனத்தை அனுபவிக்கலாம். அது ஆனந்தமானது.

அவர் கடைசியாக எழுதிய குறிப்பு - “கவுண்டவுன் நேரம் “(Countdown time) (கடைசி நிமிடங்கள்)
எனது மூச்சு சொல்லுகிறது. இப்பொழுது அரை மூச்சு. மிக விரைவில் அது கால்மூச்சாகும். ஒவ்வொரு மூச்சும் கடவுளுக்கு நன்றி செலுத்தும் வாக்காகும். (Vote Of Thanks to God)

5. உலகம் ஒரு மேடை, உங்கள் பரிணா மத்திற்கு நீங்கள் தான் சாட்சி. உயிர் வாழ்வின் அழியாமைக்கான பட்டமளிப்பு விழா. உங்கள் பயணத்தின் இறுதிநாள்.

1994 ஜனவரி 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.4:00.

# ரேக்ளா...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

பந்தயத்தில் முதல்பரிசு வாங்குவது என்பது, ‘ரேக்ளா ரேஸ்’ வீரர் ஒவ்வொருவருக்கும் லட்சியக் கனவு’ என்கிறார் பூமிச் செல்வம்.

மதுரை பக்க கிராம மக்கள் தங்களை உலகுக்கு அடையாளம் காட்டிக் கொள்ள இன்றும் நம்புவது, ஜல்லிக் கட்டையும் இந்த மாட்டு வண்டிப் பந்தயத்தையும்தான். மதுரைக்கு மட்டுமா, தமிழர்களின் பண்பாட்டுப் பெருமையல்லவா இவை!



PRANEES DECOR
BALLON DECORATIONS
பலூன் அலங்காரம்
பிறந்த நாள் விழா, திருமண நாள் விழா, ஏனையவை
பூப்புனித நீராட்டு விழா அலங்காரம்
(வீடுகளில் நடைபெறும் விழாக்கள்)
Gift Baskets, Loot Bags (Kids brithday parties)
தொடர்புகளுக்கு: 437.236.5655
Email. paballoon@yahoo.com




வாழ்க்கையில் விட்டுப்போன பொய்யான உறவுகள் மீண்டும் தொடரும் நிலை வந்தால் வேண்டாம் என்று முடிவெடுங்கள்.
வார்த்தைகளில் தான் மாற்றம் இருக்கும். மனதில் அதே அழுக்கு தான் இருக்கும்.



# வேற்றுநாட்டில் கனடியரின் உயிர் இழப்பு! ஆயுள் காப்புறுதியின் நிலைப்பாடு என்ன?




கனடாவில் ஆயுள் காப்புறுதி உடன் படிக்கை வைத்திருப்போரின் உயிர் இழப்பு என்பது இலங்கையிலோ அல்லது இன்னொரு நாட்டிலோ ஏற்பட்டு, அங்கு மரணச் சடங்குகளும் முடிவடைந்திருந் தால் அவரின் ஆயுள் காப்புறுதித் தொகையினை அவரது குடும்பத்தவர்கள் கனடாவில் கோரும்போது காப்புறுதி நிறுவனம் அதனை எப்படி கையாளும்?

இது கனடாவில் ஆயுள் காப்புறுதி உடன்படிக்கையோடு வாழ்வோர் தெரிந்து வைத்திருக்க வேண்டிய முக்கியமான தொரு விடயமாகும்.

ஏனெனில் கனடாவில் காப்புறுதி தொழில் துறையில் கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட எனது அனுபவத்தில் என் மூலம் உடன் படிக்கை செய்யப்பட்ட மூன்று நபர்களின் வெவ்வேறு காலப் பகுதியில் கனடாவுக்கு வெளியே இன்னொரு நாட்டில் நடந்து முடிந்த மரணங்களில் நான் அவர்கள் சார்பில் காப்புறுதி பணத் தொகையினை கோரும் விண்ணப்பம் சமர்பித்தபோது எதிர்கொண்ட அனுபவங்கள் ஒரு மாறுபட்ட பாடமாகவே அமைந்திருந்தது.

'உயிர் இழப்பு' நடந்தது என்பதில் சந்தேகம் என ஏதாவது அறிகுறி தெரிந்தால், காப்புறுதி நிறுவனங்கள் அதனை தெளிவு பண்ணும்வரை பணத் தொகையினை வழங்கமாட்டார்கள்.

கனடாவினுள் உயிர் இழப்பு நடந்திருந்தால் அவை இங்கு சட்ட ரீதியாகப் பதிவுக்கு போவதால் சந்தேகம் என்ற சொல்லுக்கே இடமிருக்காது.

பணம் கோர உரித்துடையவர் எவரோ அவர் ஒரு பக்க விண்ணப்பப் படிவம் (Death Claim form) நிரப்பி கைச்சாத்திட வேண்டும்.

அதனுடன் மரண சடங்கினை நடத்தும் நிறுவனம் (Funeral Home) வழங்கும் ஒரு பக்க 'மரண சான்றிதழ்' (Death certificate) விண்ணபத்துடன் சேர்த்து சமர்பிக்க வேண்டும். மேலதிக ஆவணங்கள் அனேகமாகக் கேட்கப்படுவ தில்லை. துரிதகதியில் ஆயுள் காப்புறுதிப் பணம் வந்துசேரும். இது எங்கள் அனுபவங்களில் எதிர்கொண்ட வழமைகள் ஆகும்.

ஆனால் கனடாவிற்கு வெளியே வேறொரு நாட்டிற்கு சென்றிருந்த காலத்தில் அந்த நாட்டில் உயிரிழப்பு நடந்து மரண சடங்குகளையும் அங்கு முடித்தவர்களின் ஆயுள் காப்புறுதி விடயங்களில் தொடர்ந்து அவரது குடும்பத்தவர்கள் கனடாவில் காப்புறுதி பணத்தினைக் கோர முற்படும்போது பின்வரும் ஆவணங்கள் சமர்பிக்கவேண்டும் எனக் கேட்கப்பட்டிருந்தது.

- பணம் கோர உரித்துடையவரின் கைச் சாத்திடப்பட்ட விண்ணப்பம். (Claimant's Statement): இவ் ஆவணப் பத்திரம் பொதுவாக கனடாவினுள் மரணம் நடந்தாலும் சமர்பிக்கும் பத்திரமாகும்.

- அந்நிய நாட்டு மரணம் தொடர்பான கேள்விகள் (Foreign Death questionnaire) - மரணமானவர் பிரயாணம் செய்த விவரங்களும், ஆதாரங்கள் உட்பட மரணம் நடந்தவிதம், எப்படி மரண சடங்குகள் நடந்தன போன்ற விபரங்கள் இங்கு சமர்பிக்க வேண்டும்.

அவற்றுடன் Copy of the flight tickets, Boarding pass, Luggage tags சமர்பிக்க வேண்டும்.

- மரண சான்றிதழின் மூலப் பிரதி (Original Death Certificate) - இது ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு சட்டரீதியாக அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

- மரணமாகிவிட்டார் என்ற செய்தியினை எவராவது ஒருவர் அந்த நாட்டில் உள்ள கனடியத் தூதராலயத்திற்கு அறிவித்து அவரின் கடவுச்சீட்டினையும் சமர்பித்து, அவை ரத்து செய்யப்பட்டு, அதன்மூலப் பிரதி என்பது (Copy of the cancelled passport by Canadian high commissioner in Srilanka) முக்கியமாக சமர்பிக்கப்பட வேண்டிய ஓர் ஆவணம். இந்த ஆதாரம் இல்லையேல் காப்புறுதி பணக் கோரிக்கை எந்த சந்தர்ப்பத்திலும் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

- இறுதியான பிரேத பரிசோதனை அறிக்கை (Final post-mortem report)

- மரண விசாரணை அதிகாரியின் அறிக்கை (Death enquiry statement)

- மரணச் செலவு ஆதாரங்கள் (Funeral Expenses receipts)

- தகனம் செய்யப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கை (Legal Cremation report) சுடுகாட்டில் விறகுகளை அடுக்கிவிட்டு பூதவுடலை தகனம் செய்யும் முறையில் அதற்கான சட்டரீதியான அறிக்கை எப்படி பெறமுடியும்?

பிரேத பரிசோதனை அறிக்கை, மரண விசாரணை அறிக்கை, மரண செலவு களுக்குரிய பற்றுச்சீட்டுகள் என்பவையும் முறைப்படி சமர்பிப்பது என்பது சிரமமான இன்னொரு விடயம் ஆகும்.



எனவே சமர்பிக்க முடிந்தவற்றை சமர்பித்துவிட்டு, சமர்பிக்க முடியாத ஆவணங்கள் தொடர்பான நிலைமை பற்றி அறிக்கை தயாரித்து தெளிவுபடுத்தி வழங்குவது எங்கள் தொழில்துறையின் வழமையாகும்.

ஆனால் மூவரில் ஒருவரின் விடயத்தில் மட்டும் காப்புறுதி நிறுவனத்தின் பார்வை சந்தேகமாகத் தொடர்ந்தது.
தங்கள் விடுமுறை காலத்தில் தமது நாட்டிற்கு சென்றபோது மரணமாகியவர் எனக் குறிப்பிடும் மூவரில் ஒருவர் கனடாவில் ஆரோக்கியமான மருத்துவப் பதிவுகளை வைத்திருக்கும் ஒரு நடுத்தர வயது குடும்பஸ்தன்.

தனது மனைவி, ஒரு சிறுபிள்ளை சகிதம் விடுமுறை காலத்தில் தாயக மண்ணில் நின்றபோது திடீர் இருதய கோளாறினால் மரணமாகிவிட்டார்.
தொடர்ந்து குடும்பத்தினர் தமது மண்ணில் தங்கள் வாழ்வினையும் நிரந்தரமாக்கிக் கொண்டனர்.

தாயக மண்ணிலிருந்து ஆயுள் காப்புறுதி யில் பணம் கோரும் விண்ணப்ப படிவங்களை, கேட்கப்பட்ட பத்திரங்களு டன் பணம் பெற உரித்துடைய மனைவி தாயக மண்ணிலிருந்து அனுப்பி வைக்க, அவற்றினை கனடாவில் காப்புறுதி நிறு வனத்திற்குச் சமர்பித்தபோது அவர்களின் கழுகு கண் பார்வையில் இந்த விடயத்தில் மட்டும் உயிருடன் தலைமறைவாக இருந்துகொண்டு ஆயுள் காப்புறுதி பணத்திற்காகக் குடும்பத்தவர்கள் யாவரும் சேர்ந்து மோசடி செய்ய முயல்கின்றனரோ என்றதொரு சந்தேகம் எழத் தொடங்கியது.

இலங்கையின் தலைநகரில் கிளை ஒன்றினை வைத்து செயல்படும் சர்வதேச புலனாய்வாளர்கள் நிறுவனம் (INTERNATIONAL INVESTIGATORS NETWORK) ஒன்றினூடாக இந்த மரணம் உண்மையானதா என்பதனை புலனாய்வு செய்யும் நகர்வுகளை கனடாவின் காப்புறுதி நிறுவனம் முன் எடுத்தது.

இரு புலனாய்வு அதிகாரிகள் தாயக மண்ணின் கிராமத்திற்கு நேரடியாக சென்றனர்.

மரணமானவரின் மனைவி, பிள்ளை அந்த நேரம் அங்கு நின்றபடியால் நேரடியாக சந்தித்து வாக்குமூலங்களைப் பெற்றுக் கொண்டனர்.

மரணச் சடங்கு நடந்த வீடு, பூதவுடல் தகனம் செய்யப்பட்ட மயானங்களைப் படங்கள் எடுத்தனர்.

வீட்டில் வைக்கப்பட்டிருந்த மாலையிடப் பட்ட மரணமாகியவரின் உருவப்படங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றினையும் படம் எடுத்தனர்.

யாழ். வைத்தியசாலையில் வழங்கப்பட்ட மரணத்தினை உறுதிபடுத்தும் பத்திரங்கள், பிரேதப் பெட்டி வாங்கிய கடையின் பற்றுச் சீட்டின் பிரதிகளை நேரடியாக எடுத்துச் சென்று உறுதிபடுத்தினர்.

மரணம் உண்மையாக நடந்தது, அங்கு மோசடிகள் எவையுமில்லை என்பதனை உறுதிபடுத்தி அதன் அறிக்கைகளை கனடாவின் காப்புறுதி நிறுவனத்திற்கு விசேட புலனாய்வாளர்கள் அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து காப்புறுதி நிறுவனம் வழங்க வேண்டிய பணதொகையினை தங்களின் ஒழுங்கு முறைகளுடன் வழங்கியது.







வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
vanyjeganmohan@gmail.com
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East. Unit 222 Toronto ON M1S 0C2


Welcoming new patients of all ages since 2000 at ...
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
Bridletowne Dental
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3.
(Midland & McNicoll, MAXUM Building,
In the RONA PLAZA)
www.bridletownedental.com

LAND FOR SALE
9th Line and Main St. Stouffville
Site plan approved for 12 townhouses
Asking $5.2M
Contact: Gulshan Sharma Broker
416.321.6969
HOMELIFE GTA REALTY INC. Brokerage*
5215 Finch Ave E., #203, Toronto ON M1S 0C2


INDRA MICHAEL XAVIER
Broker
647.995.6829
indra.m.xavier@gmail.com
Buying Home/ Selling / Investing
HomeLife/Future Realty Inc.,
Brokerage Independently Owned And Operated
905.201.9977 905.201.9229
205-7 Eastvale Dr. Markham ON L3S 4N8


## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

பால்காரர் ஒருவர் தன் பசுவை இழுத்துக் கொண்டு வீதியோரமாக வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார். அமைதியாக நடந்து வந்துகொண்டிருந்த பசு திடீரென அடம் பிடித்து நடுவீதியில் அமர்ந்து கொண்டது.

அகலம் குறைந்த அந்த வீதியில் சைக்கிள், பைக் தவிர வேறு எந்த வாகனங்களும் செல்லமுடியாதபடி பசு நடுவீதியில் படுத்திருந்தது. பால்காரர் எவ்வளவு முயற்சி செய்தும் அந்தப் பசுவை இம்மியளவும் நகர்த்த முடியவில்லை.

அந்த வழியாக ஒரு போலீஸ்காரர் வந்தார். தன்னுடைய முரட்டு மீசையை யும் கையிலிருந்த லத்தியையும் வைத்து மிரட்டிப் பார்த்தார். பால்காரரோடு சேர்ந்து பசுவை இழுத்துப் பார்த்தார். பசு அசையவில்லை.

அப்போது ஐஸ்கிரீம் விற்கும் நபர் ஒருவர் அந்த வழியாக வந்தார். குளிர்ச்சியாகப் பேசிப்பார்த்தார். நகராமல் நின்ற பசுவை மூவரும் சேர்ந்து இழுத்தனர். முயற்சிகள் தோல்வியில்தான் முடிந்தது.

மல்யுத்தப் போட்டியொன்றில் வெற்றி பெற்று திரும்பிக் கொண்டிருந்த வீரர் ஒருவர் அந்த வழியாக வந்தார். ஒரு பசுவை ரோட்டிலிருந்து நகர்த்த மூன்று பேர் செய்து கொண்டிருக்கும் முயற்சி களைப் பார்த்து நகைத்தார். மூன்று பேரையும் நகரச்சொல்லி விட்டு மல்யுத்த வீரர் தனித்து மாட்டை இழுத்துப் பார்த்தார். பசு அசரவில்லை.

அந்த வழியாக ஒரு சிறுவன் வந்தான். அவன் வீதியருகே வளர்ந்து நின்ற புற்களைப் பறித்துக் கட்டாகக் கட்டிப் பசுவின் முகத்தருகே காட்டினான். பசு புல்லை சாப்பிட எழுந்தது. சிறுவன் புல்லை பசுவிடம் காட்டிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான். பசுவும் அவனோடு நகர்ந்தது.

தங்கள் பலங்களைக் காட்டி கற்றல் நிகழ்வுகளை வகுப்பறையில் உருவாக்க சிலர் நினைக்கின்றர். ஆனால் சில எளிய நிகழ்வுகளில்தான் கற்றல் தானாகவே உருவாகிறது என்பதை அவர்கள் ஏனோ மறந்து விடுகின்றனர். - செல்வகுமார்



Million Mortgages
Business Owner?
SELF EMPLOYED?
Contractor?
SWITCH AND SAVE THOUSANDS ON YOUR MORTGAGE.
• 1st Mortgages
• 2nd Mortgages
• Refinancing
• Equity Takeout
• Debt Consolidation
• Loan Repayments
Open Monday through Sunday 9:00am - 8:00pm
Serving the Greater Toronto Area
@millionmortgages


Mortgage Agent
Krish Ramesha
Dominion Lending Centres
FSRA #10304
Start Saving Today. 416-305-5200 krish.r@dominionlending.ca
YOUR MORTGAGE JUST GOT AN UPGRADE.